DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1382
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 30, 2022

# Ontario Government Building Holy Angels Catholic School in Etobicoke

**Today, Ontario's Minister of Education,Stephen Lecce, Minister of Infrastructure and MPP for Etobicoke Centre Kinga Surma, , and MPP for Etobicoke-Lakeshore Christine Hogarth, , attended a ground-breaking ceremony at the site for the new replacement school for Holy Angels Catholic School in Etobicoke.**



## ஈற்றோபிக்கோ நகரில் ஒன்ராறியோ கல்வி அமைச்சு நிர்மாணிக்கும் புதிய பாடசாலை Holy Angels Catholic School

ஈற்றோபிக்கோ நகரில் ஒன்ராறியோ கல்வி அமைச்சு நிர்மாணிக்கும் **Holy Angels Catholic School** என்னும் புதிய பாடசாலைக்கு நேற்று ஒன்றாரியோ மாகாண , கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ், உள்கட்டமைப்பு அமைச்சர் கிங்கா சுர்மா மற்றும் ஈற்றோபிக்கோ தொகுதிக்கான **MPP**, கிறிஸ்டின் ஹோகார்த், ஈற்றோபிக்கோ-லேக்ஷோர் **MPP**, ஹோலி ஆகியோர் புதிய மாற்றுப் பாடசாலைக்கான அத்திவாரம் இடும் விழாவில் கலந்து கொண்டனர்

இந்தப் புதிய பாடசாலை கட்டுமானத் திட்டம், உள்ளூர் பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒன்றாறியோ அரசின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும், ஒன்றாரியோ மாகாணமானது ரொறன்ரோ கத்தோலிக்க மாவட்டப் பாடசாலைகள் சபைக்கு இந்தத் திட்டத்திற்காக 22.6 மில்லியன் டாலர்களை வழங்கி இந்த நவீன கற்றல் வசதியை உருவாக்குகிறது

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)



## சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு உதவி கோரி நிற்கும் மன்னாரைச் சேர்ந்த மாணவி

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜிம் ரோன் நகர் கிராமத்தில் வசிக்கும் ஜோஸ்பின் டிரோனிக்கா எனும் 17 வயது மாணவிக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்.

இச்சிறுமி உயிர் வாழ்வதற்கு வருகிற 10 ஆம் மாத இறுதிக்குள் கட்டாயமாக ஒரு சிறுநீரகம் மாற்ற வேண்டிய அவசர நிலையில் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சத்திர சிகிச்சைக்கு ரூபாய் 80 லட்சம் தேவைப்படுகிறது.

எனவே புலம்பெயர் உறவுகள் இன்னும் நல்லுள்ளம் கொண்ட எம் உறவுகள் அனைவரும் ஒரு உயிரை காப்பாற்ற உங்களால் முடிந்த உதவி செய்யுமாறு பெற்றோர் வேண்டி நிற்கின்றனர்.

தொடர்புகளுக்கு டிரோனிக்கா -0779252200

கணக்கு இலக்கம்.
(தாய்)
**Josephine Nicholas Ranshini**
**PEOPLES BANK-** மன்னார் கிளை
*044200200047225*

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்
RE/MAX REALTRON BLUE FORCE




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை

Keele And hwy7 சந்திப்புக்கு அருகில் Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை
மாலை 3 - 11 (evening)
இரவு 11 - 7 (midnight)
Full time work

அழைக்க வேண்டியவர் -சங்கர்
416-305-0264

### CLEANING JOB

Major Mackenzie / Markham பகுதியில் துப்பரவுப் பணிக்கு ஒருவர் தேவை. 7 நாட்கள் வேலை. வேலை நேரம் அதிகாலை 5 மணி முதல் 8 மணிவரை. அனுபவமுள்ள machine operator தேவை.

தொடர்புகளுக்கு:
(647) 701-9809

### மணமகன் தேவை

விரிவுரையாளராக Saskatchewan ல் பணியாற்றும் 33 வயதுடைய 5'8" உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு:-
416 846-2569

### வேலைக்கு ஆட்கள் தேவை

Downtown Toronto ல் John and Adelaide சந்திப்பில் அமைந்துள்ள Fox on John Restaurant க்கு Line cooks உடனடியாக தேவை.
$20/hr + Tips
Full Time.
Parking Available.
தொடர்புகளுக்கு:
647-494-5592

### HOUSE for RENT

Ajax இல் Rossland & Church St. க்கு அருகில் 4 Bedroom detached house with 3 washrooms, 3 parking spots & laundry வாடகைக்கு உண்டு. Close to public transportation, Hwy 401 & 407, shops, park & school.

Contact:
(416) 509-7247

### வேலைக்கு ஆட்கள் தேவை

Markham நகரில் Woodbine & 14th Ave. சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு kitchen helper மற்றும் dish washer, part-time line cook & South Indian cooks உடனடியாக தேவை. Female cook also needed.

Call Amar:
(416) 988-9518

### Tutor Available

Math, Physics and Chemistry ஆகிய பாடங்கள்

Experienced Tutor is available for online tutoring in the subjects of Math, Physics and Chemistry.

For further details contact Sethu:
(416) 858-4259
Sedumadavan@hotmail.com

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva **416-706-8160**



VOTE FOR

பிரம்ரன் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பிராந்திய வேட்பாளரான
(Regional Councilor- Ward 7 & 8)

# சிந்தியா ஸ்ரீ பிரகாஸ்

(Cynthia Sri Pragash) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

bramptonmatters@outlook.com
Tel: 416-575-9569

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களுக்கான பிராந்திய கவுன்சிலருக்கான தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள இளைய தலைமுறை வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ் அவர்கள் பூக்களின் நகரம் என வர்ணிக்கப்பெறுகின்ற பிரம்ரன் நகரத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

தனது கணவரோடும் இரண்டு பிள்ளைகளோடும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் இவர் தனது 11வது வயதில் கனடாவில் குடியேறியவராவர். இவருக்கு சிறுவயதிலிருந்தே சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதே விருப்பமான ஒன்றாகத் தோன்றியது. ஆதனால் தொண்டராக பல நிறுவனங்களில் பணியாற்றத் தொடங்கினார்.

பின்னர் தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டம் பெற்ற சிந்தியா. பல பதவிகளை வகித்து பாராட்டுக்களைப் பெற்றவர். தான் சார்ந்த சமூகத்திற்கு சேவையாற்றும் வகையில் தற்போது. பிரம்ரன் நகரசபையின் பிராந்திய கவுன்சிலர் பதவி ஒன்றுக்கு வேட்பாளராக தன்னை நிறுத்தியுள்ளார். தான் பிராந்திய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பெற்றால். பல முக்கிய தேவைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக அயராது பாடுபடுவேன் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களில் உள்ள மக்களுக்கான பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் சமூகங்கள் சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி பயனுள்ள வகையில் தங்கள் ஓய்வு நேரங்களில் ஈடுபடும் வகையில் பணியாற்றவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிரம்ரன் வாழ் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ்
(Cynthia Sri Pragash- Ward 7-8 Brampton Municipal Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# போதைப் பொருள் என்னும் 'பிசாசின்' கரங்களில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் உலகின் இளைஞர் சமுதாயம்

அண்மைக்காலங்களில் உலகெங்கும் போதைப் பொருள் என்னும் பிசாசின் கரங்களில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் உலகின் இளைஞர் சமுதாயம் நாளொரு கேடு என்று வருத்தத்துடன் தெரிவிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஒரு முக்கியமான விடயம் ஒன்றுக்காக நாம் கவனத்துடன் செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது.

உலகின் எந்த தேசத்திலும் எந்த நகரத்திலும் இவ்வாறான அட்டகாசமான போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுப் போனவர்கள் தங்கள் வாழ்க்கையை தொலைத்துக் கொண்டே போகின்றார்கள்.

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் உலகின் பல நாடுகளிலுமை் எதிர்கொண்டுள்ள முக்கிய சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருட்கள் பாவனை விளங்குகின்றது. ஆனால் போதைப்பொருட்கள் உடல், உள ஆரோக்கியத்திற்கும் சமூகத்திற்கும் மாத்திரமல்லாமல் நாட்டுக்குமே தீங்கு விளைவிக்கக் கூடியனவாகும். இது நன்கு நிரூபிக்கப்பட்டுள்ள உண்மையும் கூட.

அப்படியிருந்தும் சட்டவிரோதமான முறையில் போதைப்பொருட்கள் உற்பத்தி உள்ள நாடுகளில் இருந்து இதர நாடுகளுக்கும் பரவச் செய்வதும் அதன் விற்பனையும், பாவனையும் மாத்திரமல்லாமல் போதைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட குற்றங்களும் அதிகரித்தே காணப்படுகின்றன.

கைப்பற்றப்படும் சட்டவிரோத போதைப்பொருட்களின் அளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு உட்பட போதைப்பொருள் விற்பனையிலும் பாவனையிலும் ஏற்பட்டுள்ள அதிகரிப்புகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக உள்ளன. கனடாவில் மருத்துவக் குணம் கொண்ட போதைப் பொருளை விற்பதும் கொள்வனவு செய்வதும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவது என்பது மக்களில் பலர் விரும்பாத ஒன்றாகவே இருந்தது. ஆனால் அரசாங்கம் தனது கபடத் தனத்தை சாதித்து விட்டுத. போதைப் பொருளை உட்கொள்வது அல்லது புகைப்பது போன்ற விடயங்களில் பல கட்டுப்பாடுகளை உலக நாடுகள் ஒன்று கூடீ தடுப்பது ஒரு கடமையாகிவிட்டது.

அந்த வகையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் இலங்கையின் யாழ் குடாநாட்டில் மாத்திரம் 11இளைஞர்கள் ஹெரோயினுக்கு அடிமையாகி உயிரிழந்துள்ளனர். இதன்படி ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனை யாழ்ப்பாணத்தில் எவ்வளவு தூரம் அதிகரித்துக் காணப்படுகிறது என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஹெரோயின், ஐஸ், மர்ஜுவானா எனப் பல பெயர்களில் காணப்படும் போதைப்பொருட்கள் இளம் பராயத்தினரை இலக்காகக் கொண்டுதான் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸாரின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இற்றைக்கு இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஒவ்வொரு நாட்டின் தலைநகரங்களில் காணப்பட்ட காணப்பட்ட இப்போதைப்பொருட்களின் பாவனை இன்று நாடெங்கிலும் கிராம மட்டம் வரையும் வியாபித்துள்ளது. இவற்றின் பாவனைக்கு உள்ளாகி இருப்பவர்களில் பெரும்பகுதியினர் இளம் பராயத்தினராக இருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

தென்னாசிய நாடுகளிலும் இந்த போதைப்பொருட்களின் வருகை, விற்பனை, பாவனை என்பவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளது போன்று உடல், உள ரீதியிலான உபாதைகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவென வருடாவருடம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டிய நிலைக்கும் நாடு முகம் கொடுத்துள்ளது. இதனை சுகாதாரத் துறைத் தரவுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதேநேரம் போதைப்பொருட்களின் காரணமாக எத்தனையோ குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகிப் போயுள்ளன. எத்தனையோ குடும்பங்கள் வறுமையின் பிடிக்குள் வலிந்து தள்ளப்பட்டுள்ளன. எத்தனையோ குடும்பங்கள் தெருவுக்கு வந்துள்ளன. போதைப்பொருட்களின் மூலம் தனிநபருக்கோ, சமூகத்திற்கோ, நாட்டுக்கோ எந்த நன்மையுமே கிடைப்பதில்லை. மாறாக அவற்றின் விளைவுகள் அனைத்துமே பாதிப்புகள் நிறைந்தவையாகும். போதைப்பொருட்கள் இளம் பராயத்தினருக்கே பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

# மன்னார் அரசாங்க அதிபருக்கு சமூகப் பாதுகாப்பு சபையின் தேசிய விருது வழங்கி கௌரவித்தது



சமூக பாதுகாப்பு சபை வட மாகாணத்திற்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை(29) நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து மாவட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இளைஞர் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய முன்னேற்பாடு திட்டமான ஆரஸ்சாவ, சுரக்கும திட்டத்தின் ஆரஸ்சாவ திட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான ஓய்வூதியத் தொகையின் பெறுமதியின் அடிப்படையில் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட இலக்கினை 100 வீதம் பூர்த்தி செய்தமைக்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.அ.ஸ்ரான்லி டிமெல் அவர்களுக்கு தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதே போன்று பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட இலக்குகளை தேசிய ரீதியில் அடைவு மட்டத்தை அடைந்து கொண்ட பிரதேச செயலகமாக நானாட்டான் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டதுடன் அப் பிரதேச செயலகத்திற்கான தேசிய விருதும்(2021) வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதேபோன்று 2019ஆம் ஆண்டு தேசிய ரீதியில் அடைவு மட்டத்தை அடைந்த பிரதேச செயலகமாக மன்னார் நகர பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டதுடன் அதற்கான தேசிய விருதும் முன்னாள் பிரதேச செயலாளருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# "மக்களுக்காக ஒத்துழைப்புகளை வழங்குங்கள்" இலங்கைக்கான தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெண்டுகோள்



தற்போதைய நெருக்கடி நிலையில், இலங்கை மக்களை கருத்தில் கொண்டு சீனாவின் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங்கிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசாவுடன் உத்தியோகபூர்வ சந்திப்பொன்றில் ஈடுபட்டிருந்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு நட்புறவை வெளிப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையின் போது சீனாவினால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளுக்கு நன்றிகளை தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர், எதிர்காலத்திலும் அவ்வாறான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கடன் நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ள நிலையில், இந்த நகர்வுகளில் மிக முக்கியமான இருதரப்பு கடன் வழங்குநர்களின் ஒத்துழைப்புகள் அவசியம் என்பது குறித்தும், இந்த விடயத்தில் இலங்கை மக்களை கருத்தில் கொண்டு சீனாவின் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் எடுத்துரைத்துள்ளார்.

மேலும், சீனாவின் வாழ்வாதார உதவிகள் மற்றும் பொதுவான நலன்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார். இலங்கையின் நெருக்கடி நிலைமைகளில் சீனா எப்போதுமே இலங்கைக்கு ஆதரவாகவும் பக்கபலமாகவும் இருக்கும் எனவும், சீனா எப்போதுமே இலங்கைக்கு நல்ல நண்பன் எனவும் சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் இந்திய மாணவர்களுக்கு எதிரான வெறுப்பு குற்றங்கள் — இந்தியா எச்சரிக்கை



சமீப காலமாகவே, வெளிநாடுகளில் இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது அதிகரித்து வந்துள்ளது. இந்நிலையில், கனடாவில் இந்திய மாணவர்களுக்கு எதிராக வெறுப்பு குற்றங்கள், மதவெறி வன்முறைகள் ஆகியவை அதிகரித்துள்ளது குறித்து இந்தியா எச்சரித்துள்ளது. விழிப்புடன் இருக்குமாறு கனடா வாழ் இந்திய மாணவர்களை இந்திய அரசு கேட்டு கொண்டுள்ளது. இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெறுப்பு குற்றங்கள், மதவெறி வன்முறை மற்றும் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகள் போன்ற சம்பவங்களை கனடாவுடன் எடுத்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் இதுவரை கனடாவில் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. விவரிக்கப்பட்டுள்ளபடி குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, கனடாவில் உள்ள இந்தியப் பிரஜைகள் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பயணம்/கல்விக்காக கனடாவுக்குச் செல்பவர்கள் தகுந்த எச்சரிக்கையுடன் மற்றும் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சீக்கியர்களுக்கு தனி நாடு கோரி வாக்கெடுப்பு நடத்த கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் கோரிக்கை விடுத்திருப்பது இந்திய, கனடா நாடுகளுக்கிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு மத்தியில், வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. காலிஸ்தான் வாக்கெடுப்பு குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி நேற்று பேசுகையில், "இந்த வாக்கெடுப்பு தீவிரவாத சக்திகளின் கேலிக்கூத்து. இது ஒரு நட்பு நாட்டில் அனுமதிக்கப்பட்டது ஆழ்ந்த ஆட்சேபனைக்குரியது" என்றார்.

ஒட்டாவாவில் அல்லது டொராண்டோ அல்லது வான்கூவரில் உள்ள தூதரகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு கனடாவில் உள்ள இந்திய பிரஜைகள் மற்றும் மாணவர்களை அரசு வலியுறுத்தியது. "தேவை அல்லது அவசரநிலை ஏற்படும் பட்சத்தில், கனடாவில் உள்ள இந்திய குடிமக்களுடன் தூதரகம் தொடர்பு கொள்ள இது உதவும்" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கனடாவில் 1.6 மில்லியன் இந்திய வம்சாவளியினர் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் வசிக்கின்றனர். இந்த ஆண்டு, கனடாவில் இந்து கோயில்கள் மீது இரண்டு தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. செப்டம்பர் 15 அன்று, ஒரு கோயில் சிதைக்கப்பட்டது.

# அரசு பாடசாலைக்கு செல்லும் வழியில் இரண்டு மதுபானக் கடைகள் – முற்றுகையிட்ட கிராம மக்கள்

இந்தியா செய்திகள்
India News



சேலம் அருகே புதிதாக மது கடை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காவல் நிலையத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சேலம் மாவட்டம், மேட்டூர் அடுத்துள்ள கோரமங்கலம் பகுதியில் இரண்டு அரசு மதுபான கடைகள் திறக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக கட்டிடங்கள் கட்டும் பணியும் தொடங்கியுள்ளன. இந்த நிலையில், புதிதாக இரண்டு மது கடைகளை கோரமங்கலம் கிராமத்தில் திறக்கக் கூடாது என்று, கிராம சபை கூட்டத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி, சேலம் மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் சேலம் கோரமங்கலத்தில் டாஸ்மாக் கடை திறப்பதற்கான பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வந்துள்ளது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (23) காலை ஜலகண்டபுரம் காவல் நிலையத்தில், கோரமங்கலம் கிராமத்தை சேர்ந்த அனைத்து மக்களும் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் இடம் தங்களது கோரிக்கையை மனுவாக அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கிராம மக்கள் தெரிவிக்கையில், “எங்கள் கிராமத்தில் மது கடையை திறக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும். தொடர்ந்து அதனையும் மீறி மதுக்கடையை திறக்க முயற்சி மேற்கொண்டால், போராட்டத்தை நாங்கள் தீவிரபடுத்துவோம். பள்ளி குழந்தைகள் செல்லும் பாதையில் இந்த மது கடை அமைய உள்ளதால், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உருவாகும். இதனால் நாங்கள் எங்கள் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை உருவாகும்” என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.





# அரசியல் சட்ட மாண்பிற்கு விடப்பட்ட அறைகூவல்!

## தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள கண்டன அறிக்கை

கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி அன்று நள்ளிரவில் தமிழகம் உள்பட இந்தியா முழுவதிலும் 15க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பி.எ.’ப்.ஐ. மற்றும் எஸ்.டி.பி.ஐ. கட்சிகளின் அலுவலகங்கள் தேசிய புலனாய்வு முகமையால் சோதனையிடப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

சோதனையிடுவதற்கான ஆணைகளை காட்டாமலும், அனுமதியின்றி வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்தும், இச்சோதனைகள் நடைபெற்றுள்ளன. மக்களை அதிர வைத்த இந்நிகழ்ச்சியின் அலைகள் ஓய்வதற்கு முன்னர் இரண்டாம் முறையாக செப்டம்பர் 27ஆம் தேதி அன்று மீண்டும் தேசிய புலனாய்வு முகமை பல்வேறு மாநிலங்களில் சோதனை நடத்தி 250க்கும் மேற்பட்டவர்களை கைது செய்து சிறைகளில் அடைத்துள்ளது.

தேசிய புலனாய்வு முகமை இச்சோதனைகளை நடத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கோ அல்லது மாநிலக் காவல்துறைக்கோ தெரிவிக்காமலும், அதிரடியாக இக்கைதுகளை நடத்தியுள்ளது அரசியல் சட்ட மாண்பிற்கும், கூட்டாட்சி முறைக்கும் விடுக்கப்பட்ட அறைகூவலாகும். பகல் வேளையில் சோதனை நடத்தாமல் நள்ளிரவில் மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இத்தகைய அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டுள்ளது ஏன்?

பா.ச.க. ஆளும் மாநிலங்களில் மட்டும் மாநிலக் காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய புலனாய்வு முகமை இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இவ்வாறு செய்யவில்லை. மொத்தத்தில் முசுலீம் சமுதாயத்தைக் குறி வைத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத நல்லிணக்கத்துடனும், அமைதியாகவும் வாழும் மக்களிடையே அச்சமூட்டும் வகையிலும் நாட்டில் மதக் கலவரங்களை மூட்டும் நோக்கத்துடனும் சனநாயக ரீதியாக செயல்படும் அமைப்புகளை சீர்குலைப்பதற்கும் இந்திய அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறேன். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

பழ.நெடுமாறன்
தலைவர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொழும்பில் பிரபல பாடசாலை ஒன்றில் மது போதையில் பாடசாலைக்கு வந்த உதவி அதிபர்



கொழும்பில் பிரபல பாடசாலை ஒன்றின் உதவி அதிபர் மது போதையில் பாடசாலைக்கு வருகை தந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர் தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றியுள்ளார். எனினும் திடீரென அவர் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு செல்வதற்காக உந்துருளியில் ஏறியுள்ளார். ஆனால் குறித்த உதவி ஆசிரியரால் உந்துருளியை இயக்க முடியாமையினாலும், தனது உடல் கட்டுப்பாட்டினை இழந்தமையினாலும் கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கற்கும் மாணவர்கள் கீழே விழுந்த ஆசிரியரை தூக்குவதற்கு முயற்சித்த வேளையிலேயே அவர் மது போதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

அத்துடன் பாடசாலையில் பெற்றோர்களுக்காக மாதாந்த கூட்டமும் நடைபெறவிருந்தமையினால் பெற்றோர்களும் பாடசாலைக்கு வருகை தந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. உதவி அதிபரின் செயலை கண்டித்து பெற்றோர்கள் அதிபருடன் முரண்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறையில் ஆரம்பபிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்துவைப்பு



ஐக்கிய இராட்சியத்தைத் தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் மற்றும் லண்டன் வாழ் ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஒன்றியம் U.K, பல இலண்டன் பழைய மாணவர்கள் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் யா/ஈவினை அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை ஒன்றில் ஆரம்பபிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் 2022 புரட்டாதி 22ம் திகதி குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

இக்கல்லூரியின் முதல்வர் திரு. ம. தரணீதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்விவலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. பொ. ரவிச்சந்திரன் அவர்களும் சிறப்புவிருந்தினர்களாக யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் திரு. சோ. ஸ்ரீகிருஷ்ணா அவர்களும், வளவாளர் திரு. சி. சிவரதீஸ் அவர்களும் கலந்து விழாவினை சிறப்பித்து வைத்தனர்.

விழாவில் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திறன் வகுப்பறையானது கல்விப்பணிப்பாளர் அவர்களாலேயே திரைநீக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு ஆரம்பித்தும் வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஆசிரியர் ஒருவரால் கற்றல் செயற்பாடு நடாத்தப்பட்டதுடன் மாணவர்களும் தமது செயற்பாட்டை திறன் பலகையில் செய்து காட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பின்தங்கிய அடிப்படைவசதிகள் குறைந்த எமது பிரதேசத்தில் இத்தகைய கல்வி வசதி எமக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமே. இதனைப் பயன்படுத்தி நாம் உச்சப்பயனைப் பெறுவோம் என பாடசாலையின் மாணவத்தலைவனால் கூறப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உதவியளித்திருந்த லண்டன் வாழ் ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஒன்றியம், லண்டன் பழைய மாணவர்கள், மற்றும் இரட்ணம் பவுண்டேசன் அமைப்புக்கும் அதிபர் உட்பட விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், திறன் பலகையைப் பயன்படுத்தி மாணவர்கள் தமது ஆராய்வூக்கம் மற்றும் ஆக்கம் திறன் முயற்சிகளுக்காக எவ்வாறு பயன்படுத்தி சிறப்பாகத் துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.










# பயங்கரவாத தடைச்சட்டம் இன்று சிங்களவர்களுக்கு எதிராக திரும்பியுள்ளது - ஸ்ரீதரன் MP

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கடந்த காலங்களில் பகிரங்கமாக கொல்லப்பட்ட பல தமிழர்களுக்கு இதுவரை நியாயம் கிடைக்கப்பெறவில்லை. தமிழர்களுக்கு எதிரான கொலை, பயங்கரவாத தடைச்சட்டம் இன்று சிங்களவர்களுக்கு எதிராக திரும்பியுள்ளது.

சிங்கள மக்களின் உரிமை, பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்படுவதை போன்று தமிழர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல வின் மறைவு மற்றும் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவு மீதான ஒத்திவைக்கப்பட்ட அனுதாப பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவிக்கு உயரிய சபையில் தமிழ் மக்கள் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரள மோசமான முறையில் கொல்லப்பட்டார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.மனித குலத்துக்கு எதிரான வகையில் அவர் கொல்லப்பட்டார்.

இலங்கையில் இது புதியதொரு விடயமல்லாத போதும் இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கிருஷாந்தி படுகொலை செய்யப்பட்டமை, செம்மணி படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றன. இருப்பினும் இதற்கு இதுவரை நியாயம் கிடைக்கப்பெறவில்லை.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் பகிரங்கமாக கொல்லப்பட்டார். ஜோஷப் பராராசசிங்கம், சிவநேசன், ரவிராஜ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால் இதுவரை இவர்களுக்கு நீதி கிடைக்கப்பெறவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம், கொலைகள் தற்போது சிங்கள மக்கள் மீது திரும்பியுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்த ரவீந்திரநாத் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் அவரது உடல் கூட கிடைக்கவில்லை. இராணுவ ஆய்வாளரும், எழுத்தாளருமான தராகி சிவராமனின் உடல் பாராளுமன்ற பகுதியில் கண்டுப்பிடிக்கப்பட்டது.

இதுவரை இவர்களுக்கு நியாயம் கிடைக்கப்பெறவில்லை. பத்திரிகையாளர் நடேசன், பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்கள். பொருளியலாளரான தம்மையா பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அதுகோரள வின் மரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

உயிரை பாதுகாத்துக் கொல்ல ஒருவர் ஓடும் போது அவர்களை துரத்தி கொலை செய்வது மனிதாபிமானமல்ல, மிருகத்தனமானவர்களினால் அவ்வாறு செயற்பட முடியும். இந்த மண்ணிலும் அவ்வாறான மிருகதனமானவர்கள் உள்ளார்கள். 1983 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரத்தின் போது பல தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள். மலையக மக்களும் கொலை செய்யப்பட்ட வரலாறும் உண்டு.

இந்த நாட்டில் மீண்டும் இவ்வாறான சூழல் ஏற்பட கூடாது.தமிழ், சிங்கள மக்கள் தங்களின் பிரதேசத்தில் அவரவர் கலாசார பண்பாட்டுடன் வாழும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். சிங்கள மக்களின் உரிமைகள் பேணப்படுவதை போன்று தமிழ் மக்களின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்றார்.




# சிறிலங்காவில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள்!

## சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு நடவடிக்கை

இலங்கையில் இந்திய இராணுவத்தை நிலைநிறுத்திய போது இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள பொறிமுறைகள் மூலம் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரியுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலியை மேற்கோள் காட்டி குறித்ததகவல் வெளியாகியுள்ளது. மோதலின் போது இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச குற்றங்களுக்கும் தீர்வு காண இலங்கை மீது வலுவான தீர்மானத்தை கோருவதாக மீனாக்ஷி கங்குலி தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்திய படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதாக அனுப்பப்பட்டிருந்த போது இடம்பெற்ற முறைகேடுகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1987 ஜூலை முதல் 1990 மார்ச் வரையான காலப்பகுதியில் இந்திய இராணுவம் அட்டூழியங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டால், இந்தியாவின் பொறுப்புக்கூறல் எவ்வாறு அமையும் என முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே மீனாக்ஷி கங்குலி இந்த கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை, UN Advocacy, FORUM-ASIA, மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW) சார்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.




# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உலக செய்திகள் World News

# இரத்தினம் பவுண்டேசன் சேவை அமைப்பினால் கணனி தொழில் சார் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



இலண்டன் இரத்தினம் பவுண்டேசனால் அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் கோளாவில் கிராமத்தில் சிவனருள் கணினி தொழில் சார் பாடநெறி தொழிற்பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுகிறது.

இக்கணனி நிலையமானது மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் Tertiary and Vocational Education Commission - TVEC கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது அப்பிரதேசத்தில் உள்ள க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளை எதிர்கொண்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் உள்ள NVQ தரச் சான்றிதழ்களை பெறுவதற்காகன ஓர் நிலையமாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அதாவது NVQ 03 சான்றிழ்களுக்கான நான்குமாத கால Computer Application Assistance - CAA பயிற்சி நெறி மற்றும் NVQ 04 சான்றிதழ்களுக்குரிய ஐந்து மாத கால Computer Graphic Designer - CGD பயிற்சி நெறிகளும் நடைபெறுகின்றது.

இதன் படி 2022.05.04 தொடக்கம் 2022.09.10 ம் திகதி வரை நான்கு மாத காலங்கள் நடைபெற்ற Computer Application Assistance - CAA (NVQ 03) பயிற்சி நெறியை இனிதே நிறைவு செய்ய 25 பயிலுனர்களுக்கான நிறுவன சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு 2022.09.14 ம் திகதி கணினி நிலைய மண்டபத்தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளால் மற்றும் பெற்றோர்களால் இக்கணனி நிலையத்தை வினைத்திறனுடன் நடைமுறைப்பத்தும் இலண்டன் இரத்தினம் பவுண்டேசன் அமைப்பினருக்கும் அதனுடன் இணைந்து செயற்படும் நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டு இந்நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.



# அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி



அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்துள்ளது.

கொரோனாவால் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க பல நாடுகள் முயன்று வரும் நிலையில் உக்ரைன்ரூ ரஷியா இடையேயான போர் உலக பொருளாதாரத்தை மேலும் பின்னோக்கி தள்ளுகிறது. மேலும், போரால் கச்சா எண்ணெய், உணவு தானியங்களில் விலை அதிகரிக்கத்தொடங்கியுள்ளது. இதன் காரணமாக அமெரிக்கா உள்பட பல நாடுகளில் பொருட்களின் விலை ஏற்றமடைந்து பணவீக்கம் அதிகரித்துள்ளது. பண வீக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்க மத்திய வங்கி உள்பட பல நாடுகளின் வங்கிகள் வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளன.

வட்டி விகித அதிகரிப்பு அன்னிய செலவாணி சந்தையில் அமெரிக்க டாலரின் தேவையை அதிகரித்து அதன் மதிப்பை உயர்த்தியுள்ளது. அதேவேளை, முதலீடுகளை பல நாடுகளும் டாலருக்கு மாற்றி வருவதால் டாலரின் மதிப்பு உயர்ந்து வருகிறது. இது போன்ற காரணங்களால் இந்திய பங்குச்சந்தையில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் சரிவைக் கண்டது. வாரத்தின் முதல் நாளான நேற்று இந்திய பங்குச்சந்தை வர்த்தகத்தை தொடங்கியது முதல் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்தது.

வர்த்தகம் தொடங்கியது முதல் சந்தையில் முதலீடுகள் வெளியேற்றம், முதலீடுகளை டாலருக்கு மாற்றுதல், கச்சா எண்ணெய் விலை, உக்ரைன் - ரஷியா போர் உள்பட பல காரணங்கள் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவை சந்தித்துள்ளது.

பங்குச்சந்தையில் வர்த்தகம் தொடங்கியதுமே அமெரிக்க டாலருக்கு இந்திய ரூபாயின் மதிப்பு 81.62 ஆக வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்து வருவதால் இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால், முதலீட்டாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# பசுமை அமைதி விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

*பொதுமக்கள் மத்தியில் சூழல் விழிப்புணர்வு, சூழற் கல்வி மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழங்கிவரும் பசுமை அமைதி விருதுகளுக்கான இந்த ஆண்டுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.*

*இதுதொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.*

*அந்த அறிக்கையில், காலநிலை மாற்றங்களும் கொரோனாப் பெருங்கொள்ளை நோயும் இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம் என்ற வலுவான பாடத்தை எமக்குப் போதித்துள்ளன. இயற்கையை நாம் மென்மேலும் சூறையாடினால் பெரும் பிரளயத்துக்குள் உலகம் தள்ளப்படும் என்று ஐக்கியநாடுகள் சபை தொடர்ந்து எச்சரித்து வருகிறது. எனினும், இந்த எச்சரிக்கைகளைப் புறந்தள்ளி இயற்கைச் சூழலை நாம் அபிவிருத்தியின் பெயராலும் உலகமயமாக்கலின் பெயராலும் தொடர்ந்து சூறையாடி வருகிறோம்.*

*இந்தச் சூறையாடலை நிறுத்திச் சூழலுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மத்தியில் சூழல் விழிப்புணர்வு, சூழற் கல்வி மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கும் சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவருக்கும் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.*


*மாணவர்களிடையே இந்த ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணையவழியூடாக 16.10.2022 காலை 6.00 மணி தொடங்கி 7.30 மணி வரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். தோற்ற விரும்பும் மாணவர்கள்* www.tamilnationalgreen.org *இணையத்தளத்தின் ஊடாக 05.10.2022 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இப்பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களிலிருந்து முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதளோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் 1 பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.*




*சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல் நேயச் செயற்பாடுகளில் பல ஆண்டுகளாகத் தீவிரமாக உழைத்து வரும் தனிநபர் ஒருவர் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பரிந்துரையில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சூழற்செயற்பாட்டாளருக்கான தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்த பசுமை அமைதி விருதும் ஒரு இலட்சம் ரூபா பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார். இந்த ஆண்டுக்கான சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்புபவர்கள் அவர் பற்றிய விபரங்களைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், இல. 109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது* greentamils5@gmail.com *என்ற மின்னஞ்சல் மூலமாகவோ 31.10.2022 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

இந்தியா செய்திகள் India News

# இனி "மனிதக் கழிவை" மனிதர்களே அள்ளினால் ஆட்சியர்களை பணி நீக்கம் செய்ய நேரிடும் — மதுரை நீதிமன்றம் எச்சரிக்கை



மனித கழிவை அள்ள மனிதர்களை பயன்படுத்தினால் ஆட்சியர்கள் சஸ்பெண்ட் செய்யப்படுவர் என உயர் நீதிமன்றம் எச்சரிக்கை. விடுத்துள்ளது. மனித கழிவுகளை மனிதனே அள்ளுவதை தடுக்காத மாவட்ட ஆட்சியர்கள் பணியிடை நீக்கம் செய்ய நேரிடும் என உயர் நீதிமன்றம் மதுரை கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது. மனித கழிவுகளை ரோபோட், நவீன இயந்திரங்களை கொண்டு அகற்றகோரிய வழக்கில் உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தூய்மை பணியாளர்களுக்கு எப்போது விடிவு காலம் பிறக்கும் என தெரியவில்லை என நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர். மனித கழிவுகளை மனிதனே அள்ளுவதை ஒருபோதும் நீதிமன்றம் அனுமதிக்காது எனவும் கூறியுள்ளனர்.

மனித கழிவுகளை மனிதன் அள்ள தடை விதித்த உத்தரவை செயல்படுத்திய ஆவணங்களை தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் முழுமையான பதில் மனு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என ஆணையிட்டனர். பாளையங்கோட்டையை சேர்ந்த அய்யா என்பவர் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். அதில், மனித கழிவுகளை மனிதனே அகற்றுவதற்கு 2013-லேயே தடை விதிக்கப்பட்டது. தடை இருந்தும் பல்வேறு மாவட்டங்களில் மனித கழிவுகளை மனிதர்கள் எடுக்கும் அவலம் தொடர்ந்து வருகிறது. மனித கழிவுகளை இயந்திரங்களை கொண்டு அள்ளுவதற்கு உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் மீண்டும் முதலீடு செய்வதில் சிங்கப்பூர் ஆர்வம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை (Lee Hsien Loong) (27) டோக்கியோவில் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தொடர்பில், இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பிரதமரிடம் விளக்கமளித்தார். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முன்னுரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இதனை வரவேற்ற பிரதமர் லீ சியென் லூங், இலங்கையில் முதலீடு செய்ய சிங்கப்பூர் மீண்டும் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கை 75வது சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கும் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.



# எரிபொருள் விநியோகம் தொடர்பில் புதிய நடைமுறை – எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தும் தர ஆய்வுக்காக எரிபொருள் மாதிரிகள் சேகரிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன் மூலம் தரம் குறைந்த எரிபொருள் இல்லாது சீரான எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தெரிவிக்கையில், "கடந்த மாதத்தில் மட்டும் பெட்ரோல் மற்றும் டீசல் தரம் குறைவாக இருப்பதாக, நுகர்வோரிடமிருந்து 100க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளது.

நாட்டில் எங்களிடம் 1,200 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. 100 இடங்களில் இருந்து 100 முறைப்பாடுகளை பெற்றிருப்பின், நாட்டின் 10 சதவீத நிரப்பு நிலையங்களில் தரம் குறைந்த எரிபொருள் உள்ளதென கருத முடியும்.

எரிபொருளில் இருந்து துர்நாற்றம் வருவதாகவும் லீட்டருக்கு பயணிக்கும் தூரத்தின் எண்ணிக்கை வழமையை விட குறைந்துள்ளது மற்றும் ஒக்கீட்டுக்கு ஏற்ப எரிபொருள் விநியோகிக்கப்படுவதில்லை என பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்கமைய, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் ஆலோசனைக் குழு, குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க தீர்மானித்துள்ளது.

எனவே எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்படும்." என கூறியுள்ளார்.



# நானாட்டானில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்குப் பொதிகள் வழங்கி வைப்பு



ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய் மார்களுக்கு போசாக்கு பொதிகள் வழங்கி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (27) காலை 10 மணியளவில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில், ஹற்றன் நஷனல் வங்கியின் நானாட்டான் முகாமையாளர் கடம்பன் மற்றும் இணை ஊழியர்களின் ஏற்பாட்டில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் விருந்தினராக கலந்து கொண்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவுப் பொதிகள் வழங்கி வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் நானாட்டான் பிரதேச வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் தாதியர்கள் வங்கி ஊழியர்கள் என்று பலரும் கலந்து கொண்டார்கள்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் ஏ9 வீதி இயக்கச்சி சந்தியில் 100 நாட்கள் செயல்முனைவின் மக்கள் குரல்

100 நாட்கள் செயல்முனைவின் 58 வது நாள் மக்கள் குரல் செவ்வாய்க்கிழமை (27.09.2022) மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் 100 நாட்கள் செயல்முனைவின் 58ம் நாள் பிரதேசத்தில் உள்ள பிரதேச பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், பெண்கள் வலையமைப்பு உறுப்பினர்கள், சிறு குழுக்களின் அங்கத்துவர்கள், ஆண்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்".

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் "13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

"பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு அபகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தார்.







எமது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி முன்னெடுக்கப்படும் ஜனநாயகப் போராட்டங்களுக்கு பெரும் சவாலாக இலங்கை அரச படைப்பிரிவினரும், இலங்கை படைப்பிரிவுகளின் புலனாய்வினர்களும் செயற்படுவது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் செயலாகவே நாம் கருதுவது டன், பாதிக்கப்பட்ட மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் உரிமைக்கான குரல் வளையை நசிக்கும் செயலாகவே நாம் இதனை கருதுவதுடன், இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் எமது "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் ஜனநாயக ரீதியான மக்கள் குரலுக்கு மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதி அவர்கள் உதவ வேண்டும் எனவும் கோருகின்றோம்.

**- மன்னார் நிருபர்**

# தலைமன்னார் ஊடாக இந்தியா செல்ல முயற்சித்த சிறுவர்கள் உள்ளடங்களாக 6 பேர் கைது – மூவரை விளக்கமறியலில்





சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற 6 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் இவர்களில் மூவரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை (6-10-2022) விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் புதன்கிழமை (28) மாலை உத்தரவிட்டார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆண்கள், ஒரு பெண் மற்றும் மூன்று சிறுவர்கள் உள்ளடங்களாக 6 பேர் செவ்வாய்க்கிழமை (27) இரவு தலைமன்னார் கடல் ஊடாக சட்ட விரோதமான முறையில் இந்திய செல்ல முயன்றுள்ளனர்.

இதன் போது கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது குறித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 18 வயதிற்கு மேற்பட்ட இரண்டு ஆண்களும் பெண் ஒருவரும் 3 சிறார்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

திருகோணமலையை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட குறித்த 6 பேரையும் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் புதன்கிழமை (28) காலை தலைமன்னார் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

தலை மன்னார் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்களை புதன்கிழமை (28) மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் 18 வயதிற்கு மேற்பட்ட இரண்டு ஆண்களும் பெண் ஒருவரையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை (06-10-2022) விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஏனைய 18 வயதுக்கு குறைந்த மூன்று சிறுவர்களையும் சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

**- மன்னார் நிருபர்**

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# ஜெனீவா தீர்மானங்கள் சார்ந்து இலங்கையின் கடந்த காலமும் எதிர்காலமும் (பகுதி 1)

**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**




"இன்னும் எத்தனை ஆண்டுகள் நாம் ஜெனீவாவுக்கு வர வேண்டும்?"

- காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட 2022 செப்டெம்பர் 16ஆம் திகதி சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானம் குறித்த முறைசாரா கலந்துரையாடலில் பேசும்போது வினவினார்.

இலங்கை 2006-2008 வரை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமை பெற்றிருந்தது. ஆனால், 2008இல் உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் அதிகரிக்கவே, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப் படுவதற்கான இலங்கையின் வேட்புமனு தோற்கடிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு வேட்பாளராக இலங்கை தன்னை முன்னிறுத்தவில்லை.

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்து ஒன்பது நாட்களுக்குப் பின்னர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது அப்போதைய இலங்கை அரசாங்கம் கோரிய வரிகளுடன் ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தது. அதன் ஒட்டுமொத்த தொனியானது இலங்கை அரசாங்கத்தை பாராட்டுவதாக இருந்தது. 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில், இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் சார்ந்த நிலைமை குறித்து மென்மையான விமர்சனத்தை வெளிப்படுத்தியதுடன், பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய உள்நாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தின. 2014ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமானது மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் இலங்கை தொடர்பில் விரிவான ஒரு விசாரணையை நடத்துமாறு கோருவதற்கு முடிவெடுத்தது. இந்தத் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது.




## தொடரும் இறங்குமுகம்

2015ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்புகளை மேற்கொண்டது. இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடனான வாக்களிப்பு அற்ற "ஒருமித்த தீர்மானத்தில்" அவை பிரதிபலித்தன. 2021ஆம் ஆண்டில் புதிய அரசாங்கமானது 2015ஆம் ஆண்டின் ஒருமித்த தீர்மானத்தை இனி மதிக்க மாட்டோம் என அறிவித்ததன் பின்னர் சாட்சியங்களை சேகரித்து பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்காக வாக்கெடுப்பு மூலம் புதியதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2009 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதியில் இலங்கை மீதான ஐந்து தீர்மானங்களின் வாக்கெடுப்புகளை உற்று நோக்கும்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கான ஆதரவானது வியத்தகு அளவில் இழக்கப்பட்டதைப் பிரதிபலிக்கிறது. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கைகள் போருக்குப் பிந்தைய வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், குறிப்பாக தமிழ் மக்கள், வெலிக்கடை சிறைப் படுகொலை போன்ற அடையாள வழக்குகள், ஊடகவியலாளர்கள் மற்றும் இளைஞர்கள் காணாமலாக்கப்படுல், இராணுவமயமாக்கல், கொவிட்-19 தொடர்பான கரிசனைகள், கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் மற்றும் மத சுதந்திரம், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் நிலைமை மற்றும் அண்மைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் போன்ற பல்வேறு மட்டத்தில் இலங்கையர் எதிர்நோக்கும் முக்கியமான மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டுள்ளன.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பரிந்துரைகளில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்தல், பொறுப்புக்கூறலை மேம்படுத்த உலகளாவிய அதிகார எல்லையினைப் பயன்படுத்துதல், அத்துடன் சொத்து முடக்கம் மற்றும் பயணத்தடை போன்ற நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன.

## புதிய தீர்மானம்

இம்மதம் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற இலங்கை தொடர்பிலான முக்கிய நிகழ்வானது மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான மிக சமீபத்திய அறிக்கையாகும்.

செப்டம்பர் 16ஆம் திகதியன்று ஜெனீவா நகரில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, வடக்கு மசிடோனியா, மொண்டிநீக்ரோ மற்றும் மலாவி ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிய குழுவைக் கொண்டமைந்த "உள்ளீட்டுக் குழு" தலைமையில் "முறைசாராதவை" எனப்படும் இரண்டு கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் வரைவு தீர்மானத்தைத் நிராகரித்து அவை நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்தினர். ஆனால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் உள்ள பெரும்பான்மையான அரசாங்கங்கள் முன்வைக்கப்பட்ட வரைவின் வாசகங்களின் வழியே ஒருவேளை தீர்மானத்தை ஆதரிக்கக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டு இலங்கை அரசாங்கமானது தீர்மானத்தின் உரையை கடுமையாக நீர்த்துப்போகச் செய்யத்தக்க முன்மொழிவுகளை முன்வைத்தது. வகைக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கான எந்தவொரு சர்வதேச தலையீட்டையும் அது நிராகரித்ததோடு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் அன்றைய அரசாங்கம் 2015இல் வழங்கிய உறுதிமொழிகள் பற்றிய குறிப்பையும் நிராகரித்து 2021ஆம் ஆண்டின் தீர்மானம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது எனவும் வலியுறுத்திக்கூறியது.

கியூபா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், வியட்நாம், ஈரான், மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்தன. அயர்லாந்து, பின்லாந்து, சுவீடன், நோர்வே, பிரான்ஸ், லக்சம்பர்க், நெதர்லாந்து, லிச்சென்ஸ்டைன், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகள் வரைவுத் தீர்மானத்தை ஆதரித்தபோதிலும் வரைவுத் தீர்மானத்தை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கவில்லை.

மொத்தம் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இரு கலந்துரையாடல்களின் போது இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அரச சார்பற்ற பேச்சாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் 15 நிமிடங்களில் பேசிய நால்வரில் சந்தியா எக்னெலிகொடவும் ஒருவர். 10 ஆண்டுகளுக்கும் மேலாக நீதி தேடி ஜெனிவாவுக்குப் பயணித்ததை நினைவு கூர்ந்த அவர், இன்னும் எத்தனை வருடங்கள் தானும் தன்னைப் போன்றவர்களும் ஜெனீவா நகருக்கு வர வேண்டும் என அரசாங்கங்கள் எதிர்பார்க்கின்றன என்று வினவினார்.

## தீர்மானத்தின் உள்ளடக்கத்தை வலுப்படுத்துதல்

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் செயன்முறையானது 2009ஆம் ஆண்டு முதல் மெதுவான முன்னேற்றத்தைக் கண்டு வந்ததோடு, 2014ஆம் ஆண்டு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினது தலைமையிலான விசாரணை, 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் உறுதிமொழிகள் மற்றும் 2021ஆம் ஆண்டு சாட்சியங்களை சேகரிக்கும் செயன்முறை ஆகியன அதன் மைல்கற்களாகக் கருதப்படுகின்றன.




இந்நிலையில், 2022ஆம் ஆண்டினது வரைவுத் தீர்மானமானது 18 மாதங்களுக்கு முன்னதாக 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து எந்தவொரு முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது.

தற்போதைய வரைவுத் தீர்மானமானது பொருளாதார நெருக்கடி, பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஒன்றுகூடலுக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் எதிரான உரிமை மீறல்கள் என்பனவற்றைப் பிரதிபலிக்கும் வகையிலான சில புதிய வாசகங்களைத் தவிர்த்துப் பார்க்கும்போது 2021ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை ஒத்ததாகவே உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, தீர்மானத்தை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் எதுவும் இல்லை.

இலங்கையின் நிலைமையை சிறப்பாகப் பிரதிபலிக்கும் வகையில் வரைவுத் தீர்மானத்தை வலுப்படுத்துவதற்கான சில வழிமுறைகள் பின்வருமாறு:

• நிகழ்ந்து வரும் உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறலில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு சுயாதீன நிபுணர் பொறிமுறையை நிறுவுதல், மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, ஐ.நா. பொதுச்சபை ஆகியவற்றுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக அறிக்கை அனுப்புதல்.

• தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தல் (அவ்வாறான அழைப்பு 2014 தீர்மானத்தில் இருந்தது. ஆயினும் 2021 தீர்மானத்திலும், தற்போதைய வரைவிலும் அது இல்லை)




(தொடர்ச்சி 19 பக்கம்)

இந்தியா செய்திகள்
India News

# பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா அமைப்பு மீதான ஒன்றியஅரசின் தடை பாசிசப்போக்கின் உச்சம் — சீமான் கண்டனம்



பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா மற்றும் அதன் கிளை அமைப்புகளுக்குத் தடைவிதித்திருக்கும் ஒன்றிய அரசின் செயல் பெரும் அதிர்ச்சி தருகிறது. நாடறியப்பட்ட சனநாயக அமைப்பான பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியாவின் வீரியமிக்கச் செயல்பாடுகளை முடக்குவதற்காகத் தொடுக்கப்பட்டுள்ள இக்கொடும் அடக்குமுறை நடவடிக்கையானது பாசிசப்போக்கின் உச்சமாகும்.

பாஜக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் நாடு முழுமைக்கும் இசுலாமிய மக்கள் மதஒதுக்கலுக்கும், கொடுந்தாக்குதல்களுக்கும், உரிமைப் பறிப்புகளுக்கும் உள்ளாக்கப்படுகிற வேளையில், இசுலாமிய மக்களின் உரிமைகளுக்காகவும், பாதுகாப்பான நலவாழ்வுக்காகவும் பாடுபடுகிற வலிமைவாய்ந்த இயக்கமான பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா மீதான தடையானது நாடெங்கிலும் வாழும் இசுலாமிய மக்களிடையே உள்ளக்குமுறலையும், ஆற்றாமையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

நாட்டையும், மக்களையும் மதத்தால் துண்டாடி, வகுப்புவாதக் கலவரங்களைத் தூண்டி, பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் மக்களின் வாக்குகளை வேட்டையாடி, ஆட்சியதிகாரத்தை அடைந்து, இந்தியாவை இந்துராஷ்டிராவாக மாற்ற முனையும் பாஜக, ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்களின் செயல்பாடுகளுக்கு எவ்விதத் தடையுமில்லாத நாட்டில் பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா போன்ற மக்கள் இயக்கங்களுக்குத் தடைவிதிக்கப்படுவது இந்நாட்டின் சனநாயகத்தையும், மதச்சார்பின்மையையும் கேலிக்கூத்தாக்கும் கொடுஞ்செயலாகும். ஆகவே, இத்தடை நடவடிக்கை என்பது பாஜக அரசின் இசுலாமிய வெறுப்பினாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சியினாலும் மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையேயாகும். இதற்கு எனது கடும் கண்டனத்தையும், வன்மையான எதிர்ப்புணர்வையும் பதிவுசெய்வதோடு, பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா இயக்கம் சட்டத்தின் உதவியோடு தடையைத் தகர்த்து மீண்டுவர துணைநிற்போமென உறுதியளிக்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்பு..அனுமதி உத்தரவை திரும்ப பெற திருமாவளவன் மனு தாக்கல்

இந்திய சுதந்திர தின 75ம் ஆண்டு, அம்பேத்கரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா மற்றும் விஜயதசமியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 50 இடங்களில் ஆர்.எஸ்.எஸ் பேரணி நடத்த அனுமதி மறுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு பல்வேறு தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ் பேரணிக்கு அனுமதிப்பது மத நல்லிணக்கத்துக்கு பேராபத்து என நாம் தலைவர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியிருந்தார். தமிழ்நாட்டை அமளிக்காடாக்க யாரும் துனை போக வேண்டாம் என திராவிடர் கழக தலைவர் கீ.வீரமணி கண்டனம் தெரிவித்திருந்தார். கடந்த சில தினங்கள் முன் செய்தியாளர்களை சந்தித்த விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், "ஆர் எஸ் எஸ் அமைப்பினருக்கு அணிவகுப்பு நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் வந்துள்ளது. இதுவரை வடமாநிலங்களில் காணப்பட்ட காட்சிகள் இப்போது தமிழகத்தில் காணப்படுகிறது. ஜனநாயகம் என்னும் பெயரில் சங்பரிவார் கும்பல் தமிழகத்தில் மதவெறி அரசியலை விதைக்க முனைந்திருக்கிறார்கள். இதற்கு நீதிமன்ற அமைப்புகளே துணை போவது அதிர்ச்சி அளிக்கிறது. தமிழக அரசு மிகுந்த எச்சரிக்கையோடு இத்தகைய பிரச்சனைகளை கவனிக்க வேண்டும்" எனவும் கூறியிருந்தார். இது குறித்து ட்விட்டர் பதிவில் "ஆர்.எஸ்.எஸ் பேரணிக்கு தடைவிதிக்க வேண்டும். காந்தி பிறந்த நாளன்று ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் தமிழ்நாடு முழுவதும் பேரணி நடத்துகின்றனர். இந்த பேரணி மத அடிப்படையில் மக்களை பிளவுப்படுத்தும் சதியாகத்தான் உள்ளது. தமிழக முதல்வர் இதில் தனி கவனம் செலுத்தி பேரணிக்கு தடைவிதிக்க வேண்டும்" எனவும் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் தமிழகத்தில் ஆர்எஸ்எஸ் அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கிய உத்தரவை திரும்ப பெறக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மனு தாக்கல் செய்துள்ளார்.

மேலும் மத நல்லிணக்கத்தை குழைத்து, பிரித்தாளும் கொள்கையை பின்பற்றுவது ஆர் எஸ் எஸ் எனவும் கூறியுள்ளார்.



# கொழும்பில் இரண்டு "கள்வர்கள்" காரணமெதுவுமின்றி சந்தித்துக் கொண்டனர்

இந்திய பாரதிய ஜனதா கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.



# ‘அடையாளத்தை தேடி 'தேய்ந்துபோகும்' மலையகம்’



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• “மக்கள் மடையர்களாக இருக்கும்வரை அரசியல்வாதிகள் புத்திசாலிகளே”
- கம்பளை பொது மகன்
• மலையக “படித்தவர்கள்” தொழிற்சங்கங்கள் கூட்டுத் துரோகம்.

மலையக வரலாறு இரு நூற்றாண்டை எட்டியுள்ள நிலையில் மலையகத் தமிழர்கள் தமது அடையாளம்குறித்த தேடுதலில் இன்றும் உள்ளனர்.

• ஆரம்பத்தில் இந்தியத் தமிழர்கள் என அழைக்கப்பட்டனர்.
• இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அழைத்தனர்.
• மலையகத் தமிழர் என்பது இன்று பரவலாகப் பேசப்படும் சொற்பதம்.

இந்தப் பெயர்களில் அரச அங்கீகாரம் “இந்தியத் தமிழ்” என்பதுதான்.

பிறப்புச் சான்றிதழ் முதல் கொண்டு அணைத்து அரச ஆவணங்களிலும் “இந்தியத் தமிழ்” என்பதுதான் பிரகடனப்படுத்தப்பட்ட பெயர். இது இன்றுவரை எவ்வித மாற்றமும் இன்றி தொடர்கின்றது.

“இந்தியத் தமிழ்” என்பது இந்திய அடையாளத்தின்பாற்பட்டது. இந்தப் பெயருடன் எமக்கு உடன்பாடில்லை எனக் கூறியே “மலையகத் தமிழர்” என்ற சொற்பதம் வலிந்து புகுத்தப்பட்டது. ஆனால் இதற்கான அரச அங்கீகாரம் இதுவரை பெறப்படவில்லை.

• இந்தியாவில் “சிலோன்காரன்”

இதில் விசித்திரம் என்னவெனில் மலையகத்தில் இருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த தமிழர்கள் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தடன் அழைக்கப்படவில்லை. அவர்கள் “சிலோன்காரன்” என்றே இந்தியாவில் அழைக்கப்படுகின்றனர்.

மலையகத்தின் “ஹெனான்” என்று ஹட்டனை வரித்துக் கொண்டவர்கள் மலையகத் தமிழர் என்று அழைத்துக் கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டினர். அந்த தலைமுறையைச் சார்ந்தவர்கள் பிரதி அமைச்சராகவும் இருந்தபோதும் இந்த மலையகத் தமிழர் சொற் பதத்திற்கு அரச அங்கீகாரம் பெறுவதுகுறித்து சிந்திக்கவும் இல்லை செயலில் இறங்கவும் இல்லை.

இது மக்கள் மத்தியில் நாம் யார்? தமது அடையாளம் என்ன? என்பது குறித்த குழப்பம் தலைவிரித்தாட காரணமாகியது.

இதனால் பெரும்பாலான மக்கள் தம்மை “இலங்கைத் தமிழர்” என்று ஆவணங்களில் அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். இந்தப் போக்கு மலையக மாவட்டங்கள் பலவற்றில் சத்தமின்றி அரங்கேறத் தொடங்கியது.

• தென்பகுதியில் சிங்களமயமாகும் மலையகத் தமிழர்

ஆனால் தென் மாவட்டங்களில் உள்ள மலையகத் தமிழர்கள் தம்மை பெரும்பான்மை இனத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். கணேசன் அப்புகாமி, கந்தசாமி பண்டா என்று பெயர்கள் மாற்றம் பெறுகின்றன. இதபற்றி அவர்களிடம் வினவினால் அடுத்த சந்ததியாவது பிரச்சனை இன்றி இருக்கும் என்று அப்பாவித்தனமாகக் கூறி தம்மை சமாதானப்படுத்திக் கொள்ளும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பெரும்பான்மை இனத்தவர்களின் பெயர்களை சூட்டத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளையில் போதிய தமிழ்ப் பாடசாலைகள் தென் பகுதிகளில் இல்லாத நிலையில் சிங்களப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்து சிங்கள மொழியில் கல்வி கற்க வைக்கின்றனர். அதாவது தமது எதிர் காலச் சந்ததியினரை சிங்களம் நோக்கி கலந்து கறைந்துபோக வைப்பதில் முனைப்பாக இருக்கின்றனர்.

மொத்தத்தில் அரச ஆவணரீதியாக “இந்தியத் தமிழர்” என இருக்கும் அடையாளத்தை ஏற்கும் மன நிலையில் இல்லாத மக்கள் தமது அடையாளத்திற்கான தீர்க்கமான முடிவினை எடுக்க முடியாத நிலையில் திசைமாறி சீரழிந்து கொண்டிருக்கின்றனர்.

வழி காட்ட எவரும் இல்லை. இதுதான் உனது அடையாளம் என கை காட்டியவர்களும் பேசு பொருளாகமட்டுமே “மலையகத் தமிழர்” என்ற பெயரை வைத்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதன் விளைவுதான் மலையகம் இன்றும் தனது அடையாளம் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றது. ஆனால் மக்கள் குழப்பத்தில் இன அடையாளத்தை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலை தொடருமாக இருப்பின் தேசிய இன விகிதாசாரத்தில் நாம் பேசுகின்ற மலையகத் தமிழர் மிக விரைவில் பூஜ்ஜியத்திற்குள் சென்றுவிடுவர். இதனையே சிங்கள தேசம் எதிர்பார்க்கின்றது. அவர்கள் தமிழர்கள் இல்லாத அல்லது சிங்களவர்களாகிய தமிழர்களையும் இணைத்த சிங்கள தேசத்தையே எதிர்பார்க்கின்றனர். அதனை நோக்கியதாகவே தென்னிலங்கையின் அணைத்து நகர்வுகளும் உள்ளன.

• ஊழல் மோசடிக்குள் மிதக்கும் மலையக தொழிங்சங்க அரசியல் கட்டமைப்பு

இதனை விரைவுபடுத்துவதாக மலையக தொழிற்சங்க அரசியல் இருக்கின்றது என்பதை பதிவு செய்தாக வேண்டும். மலையக தொழிற்சங்க அரசியல் தோட்டத் தலைவர்களில் இருந்து மாவட்டத் தலைவர்கள் மற்றும் உயர்மட்டத்தினர்வரை ஊழலில் மிதப்பதாக மக்கள் கனல் கக்கும் கோபத்தில் உள்ளனர்.

• “எப்படிப் பார்த்தாலும் நல்ல ஒரு தலைவர் மலையகத்தில் தென்படவில்லையே”
- தமிழகக் குரல்

மலையகம் அடுத்து என்ன? என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரைகுறித்து தமிழகத்தில் இருந்து ஒருவர் இவ்வாறு கருத்தினைப் பதிவு செய்திருந்தார்.

“எப்படிப் பார்த்தாலும் நல்ல ஒரு தலைவர் மலையகத்தில் தென்படவில்லையே” என்ற ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தார்.

கம்பளையில் இருந்து ஒருவர் கோபக் கனல் கக்க தெறிக்கவிட்ட எழுத்து இது.

“மக்கள் மடையர்களாக இருக்கும்வரை அரசியல்வாதிகள் புத்திசாலிகளே” என பதிவிட்டுள்ளார்.

இந்த இரு பதிவுகளையும் மலையக மக்களுக்காகவும் மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் பின்னால் நிற்கும் “மலையக படித்தவர்களின்” முன்பாகவும் வைக்கின்றேன்.

ஏனெனில் இந்த “படித்தவர்கள்” மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளை சமூக நலன் நோக்கி வழிநடத்தாது தவறிழைத்துக் கொண்டிருக்கின்றனர். இது மலையக சமூகத்திற்கு செய்யும் கூட்டுத் துரோகமாகும்.

தொழிற்சங்க கட்டமைப்பு இன்று பெரிய மாறுதல்களைக் கண்டுள்ளது. இந்த மாறுதல்களை தொழிங்சங்க தலைமைகள் மாத்திரம் அல்ல அவர்களின் பின்னால் நிற்கின்ற “மலையக படித்தவர்களும்” அறிவர். ஆனால் தொழிற்சங்க கட்டமைப்பில் மாறுதல்களை கொண்டுவருவதில் இவர்கள் ஏன் அக்கறை காட்டுகின்றார்கள் இல்லை என்பதுதான் புதிராக இருக்கின்றது.

• கருப்புத் தோல் துரைத்தனம்

தோட்டத்துறையும் காலணித்துவத்தின் எச்சசொச்சங்களை சுமந்து கொண்டு கருப்புத் தோல் துரைத்தனத்துடன் தோட்டத்துறையை நிர்வகிக்கின்றனர்.

இதனால் தோட்டத்துறையில் முரண்பாடுகளுக்கு பஞ்சமின்றி கொட்டிக் கிடக்கின்றன.

தற்போது தென்னிலங்கை மக்கள் கோரி நிற்கின்ற “சிஷ்டம் சேஞ்” மலையக தொழிங்சங்க அரசியலிலும் வேண்டும். மலையக மக்கள் இதுவரை தொழிங்சங்க அரசியல் குடும்பங்களையும் அவர்கள் சார்ந்தோரையும் வாழ வைத்தது போதும். மலையக மக்களை வாழ வைப்பதற்கான அரசியலுக்கான பாதையை மக்களே தீர்மானிக்கட்டும். அதற்கு துணையாக மலையக சக்திகளும் சிவில் சமூகமும் திரண்டெழ வேண்டும். ஏனெனில் மலையகம் பரந்து விரிந்தது.

• மலையகம் பரந்து விரிந்தது

மலையகம் என்பது தோட்டத்துறை சார்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்கள் மாத்திரம் அல்ல அவர்களுடன் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களுடன் அவர்களில் தங்கி இருப்போருடன் சுமார் 7 இலட்சம் பேருடைய வாழ்வாதார, அரசியல் பிரச்சனைகளுடன் சம்பந்தப்பட்டது.

இதற்கும் அப்பால் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகத்துறை சார்ந்தவர்கள், வேலை வாய்ப்புக்காக கொழும்பு போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்தவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் என பல தரப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இவர்கள் அனைவர்களின் அடையாளமும் அரசியல் பயணமும் கேள்விக் குறியாக நிற்கின்றது.

பொங்கல் தீபாவளி மாத்திரமல்ல வருடாந்தம் நடைபெறும் கோவில் பூஜைகளும் இவர்கள் ஒன்று கூடும் மையங்களாக தோட்டங்கள் உள்ளன. மலையகத்தைச் சேர்ந்த பெரும்பாலான வர்த்தகர்கள் தமது அடையாளத்திற்காக தோட்டக் கோவில்களை தத்தெடுத்து வைபவங்களை நடத்த தோட்டங்களுக்கு வந்து போவதும் வழமை.

மொத்தத்தில் பேசப்படுகின்ற “மலையகம்” என்பது இந்த மக்களின் வாழ்வுடன் இணைந்த குறியீடு. இந்தக் குறியீட்டைத்தான் சிங்கள தேசம் காணாமல் ஆக்க முயல்கின்றது. அந்தவகையில் தோட்டம் என்பது மலையக மக்களுக்கு ஒரு குறியீடு. அந்தக் குறியீட்டைச் சிதைப்பதே தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றது.

பெருந் தோட்டப் பொருளாதாரம் சிதைவடைந்து வருகின்றது.

• தோட்டப் காணிகள் துண்டாடப்படுகின்றன.
• சிங்களக் குடியேற்றத்திற்காகவும், நகர, மாநகர அபிவிருத்திகளுக்காகவும், காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன.
• தோட்டங்களில் வேலையின்மை வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.
• இதனால் பெரும்பாலான மலையக இளைஞர், யுவதிகள் கொழும்பு போன்ற நகரங்களுக்கு வேலையாட்களாக அதாவது வேறு சமூகங்கள் செய்ய முன்வராத கண்ணியம் குறைந்த வேலைவாய்ப்புகளில் உள்வாங்கப்படுகின்றனர்.
• இது மலையக வாக்கு வங்கியில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லன.
• இது தொடர்ந்தால் இன்றைய தொழிற்சங்க அரசியலும் கேள்விக் குறியாகும்.
• மலையக அரசியல் என்பது சிங்கள அரசியலின் எச்சங்களாக மாறிவிடும்.

இதில் இருந்து மீட்சிபெற மலையக சமூகம் தனக்குத்தானே புதிய இரத்தத்தைப் பாய்ச்சிக் கொண்டு புதுப் பிரசவம் எடுக்க வேண்டும்.

• திராவிட செல்வாக்கை தடுத்து நிறுத்தினர்.

மலையகம் 1960களில் திராவிட செல்வாக்கால் அதிகம் ஈர்க்கப்பட்ட பகுதியாக இருந்தது. ஈவேராவின் சீர்திருத்தக் கருத்துக்களால் உயிரூட்டப்பட்ட மலையகம் அது.

மலையகத்தை நோக்கிய இந்தத் தமிழக அலை சிங்கள ஆட்சியாளர்களை கிலி கொள்ள வைத்தது. இந்த பின்னணியிலேயே தமிழக பிரசுரங்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டன. உள்ளூர் பிரசுரங்களை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் எழத்தாளர்களை வளர்த்தெடுப்பதற்குமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென ஆட்சியாளர் தரப்பில் கூறப்பட்டது.

இது அவ்வேளையில் சரியான தீர்மானமாகவேப் பார்க்கப்பட்டது. இலங்கையின் தமிழ் இலக்கிய எழுத்துத்துறை உலகில் புதிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என்பது உண்மையே. ஆனால் சிங்கள ஆட்சியாளரின் நகர்வு வேறுவிதமாக இருந்தது.

அதேவேளையில் சுதந்திர இலங்கையில் பிரஜா உரிமை சட்டத்தின்மூலம் அரசியல் அநாதைகளாக்கப்பட்ட மக்களுக்காக நியமன எம்பி பதவியை மலையகத் தலைமைகளுக்கு வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் முன்வந்தனர். ஏ.எம்.அஸீஸ் எஸ்.தொண்டமான் ஆகியோருக்கு நியமன எம்பி பதவி வழங்கப்பட்டன. இது கூட மலையகத்தை நோக்கிய தமிழக அலையை தடுத்து நிறுத்தும் சிங்கள ஆட்சியாளர்களின் நகர்வாகும். இதில் சிங்கள ஆட்சியாளர்கள் வெற்றியும் பெற்றனர்.

தமிழகத் தொடர்புகளை தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் மலையக மக்களை “இந்தியத் தமிழர்” என்ற சொற்பதத்துக்குள்ளேயே வைத்திருந்தனர். இன்றும் அதே சொற்பதமே தொடர்கின்றது.

இந்தச் சொற்பதத்தால் பெருமிதம் அடையும் மலையகத் தமிழர்களும் உள்ளனர். இந்த அடையாளம் இலங்கை மண்ணில் தம்மை அந்நியப்படுத்துகின்றது என்ற உணர்வுகளால் வேதனையில் வெந்து சாவோரும் உள்ளனர். இந்த மனப் போராட்டமே மலையகத் தமிழர் என பேச வைக்கின்றது. ஆனால் மலையகத்துக்கான அடையாளம் இன்றும் பேசு பொருளாகவே உள்ளது.

மலையகம் தமது அடையாளத்துக்காக இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும். இதற்கு விரைந்து விடை காணப்பட வேண்டும்.

விரைந்து முடிவுக்கு வராவிடில் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் மலையகத் தமிழினத்தின் தலைவிதி மாற்றப்படுவதை தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

Email : vathevaraj@gmail.com

# Ontario Government Building Holy Angels Catholic School in Etobicoke

**Today, Ontario's Minister of Education,Stephen Lecce, Minister of Infrastructure and MPP for Etobicoke Centre Kinga Surma, , and MPP for Etobicoke-Lakeshore Christine Hogarth, , attended a ground-breaking ceremony at the site for the new replacement school for Holy Angels Catholic School in Etobicoke.**



## ஈற்றோபிக்கோ நகரில் ஒன்ராறியோ கல்வி அமைச்சு நிர்மாணிக்கும் புதிய பாடசாலை Holy Angels Catholic School



ஈற்றோபிக்கோ நகரில் ஒன்ராறியோ கல்வி அமைச்சு நிர்மாணிக்கும் **Holy Angels Catholic School** என்னும் புதிய பாடசாலைக்கு நேற்று ஓன்றாரியோ மாகாண, கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ், உள்கட்டமைப்பு அமைச்சர் கிங்கா சுர்மா மற்றும் ஈற்றோபிக்கோ தொகுதிக்கான **MPP** கிறிஸ்டின் ஹோகார்த், ஈற்றோபிக்கோ-லேக்ஷோர் **MPP** ஹோலி ஆகியோர் புதிய மாற்றுப் பாடசாலைக்கான அத்திவாரம் இடும் விழாவில் கலந்து கொண்டனர் இந்தப் புதிய பாடசாலை கட்டுமானத் திட்டம், உள்ளூர் பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒன்ராறியோ அரசின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியா-கும், ஒன்றாரியோ மாகாணமானது ரொறன்ரோ கத்தோலிக்க மாவட்டப் பாடசாலைகள் சபைக்கு இந்தத் திட்டத்திற்காக 22.6 மில்லியன் டாலர்களை வழங்கி இந்த ப நவீன கற்றல் வசதியை உருவாக்குகிறது.

ஒன்ராறியோ அரசின் வரலாற்றில் பொதுக் கல்விக்கான மிக உயர்ந்த முதலீடாக இருக்கும் 2022-23 பாடசாலை ஆண்டுக்கான கல்வி நிதியில் $26.6 பில்லியனுக்கும் அதிகமான நிதியை ஒன்றாரியோ அரசாங்கம் வழங்குகிறது. மாகாணத்தின் பாடசாலைகளில் முதலீடு செய்வது, ஒன்றாறியோவின் கல்வித் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும், இது பெற்றோரின் முன்னுரிமைகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் ஐந்து முக்கிய கூறுகளை உள்ளடக்கியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவையாவன மாணவர் சங்கங்கள், இசைக்குழு மற்றும் களப்பயணங்கள் போன்ற கூடுதல் பாடத்திட்டங்களை உள்ளடக்கிய முழுதான பாடசாலை அனுபவத்துடன் மாணவர்களை மீண்டும் வகுப்பறைகளில் சேர்த்தல்

· கற்றலில் உள்ள இடைவெளிகளை நிரப்ப புதிய பயிற்சி துணைபுரிகிறது
· நாளைய தொழில் வாய்ப்பிற்காக மாணவர்களைத் தயார்படுத்துதல்
· பாடசாலைகளை கட்டுவதற்கும் கல்வியை மேம்படுத்துவதற்கும் அதிக பணம் வழங்குதல், மற்றும்
· மனநல உதவிகளுக்கான அதிக பட்ச நிதியுதவியுடன் மாணவர்களுக்கு உதவுதல்.

இந்த வகையில் **Holy Angels Catholic School** புதிய பாடசாலையானது முதலீடு, பாடசாலை பழுது, புதுப்பித்தல் மற்றும் கட்டுமானத்தை ஆதரிப்பதற்காக 10 ஆண்டுகளில் $14 பில்லியன் வழங்கும் ஒன்ராறியோ அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும். 2018 முதல், அரசாங்கம் கிட்டத்தட்ட 200 பள்ளி கட்டுமானத் திட்டங்களுக்கும், 300 க்கும் மேற்பட்ட குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி கட்டிடம் தொடர்பான திட்டங்களின் மேம்பாட்டிற்கும் ஒப்புதல் அளித்துள்ளது, 100 க்கும் மேற்பட்டவை தீவிரமாக கட்டுமானத்தில் உள்ளன.

"எங்கள் அரசாங்கம் பத்து ஆண்டுகளில் கூ14 பில்லியனை முதலீடு செய்து புதிய பள்ளிகளை கட்டுவதற்கும், இருக்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கும், இளைஞர்கள் தங்கள் முழு திறனை அடையும் வகையில் குழந்தை பராமரிப்பு இடங்களை உருவாக்குவதற்கும்" என்று அங்கு உரையாற்றிய கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே கூறி-னார். "புதிய **Holy Angels Catholic School** பாடசாலையைஉருவாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் கல்வி கற்பித்தல் மற்றும் மனநல உதவிகளில் முதலீ-டு செய்வதுடன் ஈற்றொபிக்கொவில் உள்ள மாணவர்களை இப்போது மற்றும் எதிர்காலத்தில் மீண்டும் பாதையில் கொண்டு வருகிறோம். ஈற்றோபிக்கொவில் உள்ள கடின உழைப்பாளிகளான பெற்றோருக்கு ஆதரவாக இந்தப் புதிய பாடசாலையைஉருவாக்கி முன்னேற்றம் அடையும்போது, நாங்கள் தொடர்ந்து அவர்களுக்குஆஅருகில் இருப்போம். இந்த கல்வியாண்டில் மாணவர்களை சாதாரண வகுப்பறைகளில் கூடுதல் பாடநெறிகள், விளையாட்டுகள் மற்றும் மாணவர் கழகங்களுடன் சேர்த்து வகுப்பில் வைத்திருக்க நாம் உறுதி செய்கின்றோம்

"இந்த புதிய **Holy Angels Catholic School** பாடசாலைக்கான முதல-ீடு ஒன்ராறியோ அரசாங்கத்தின் அத-ிநவீன பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளை கட்டுவதற்கு $14 பில்லியன் வழங்குவதற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியா-கும். மேலும் இது நிதியுதவி பெறும் பகுதிய-ில் ஐந்தாவது பாடசா-லையாக அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.. புதிய **Holy Angels Catholic School** கத்தோலிக்க பள்ளிக்கான நிதி மிகப்பெரியது. எங்கள் சமூகத்திற்கான செய்திகள் மேலும் வரும் ஆண்டுகளில் குடும்பங்கள் மற்றும் மாணவர்கள் தரமான கற்றல் சூழலை அணுகுவதை உறுதி செய்யும்" என்று அங்கு உரையாற்றிய **MPP Etobicoke-Lakeshore** கிறிஸ்டின் ஹோகார்ட் கூறினார்.

"இந்தபுதிய **Holy Angels Catholic School** திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு: - 600 மாணவர் இடங்கள், ஐந்து குழந்தை பராமரிப்பு அறைகள் மற்றும் 88 குழந்தை பராமரிப்பு இடங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# வடக்கில் பாடசாலைகளில் போதைப் பொருள் பாவனை: பின்னணி என்ன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் மிகக்குறிப்பாக பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் அண்மைக்கால புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பிரசுரிக் க்கப்படும் கருத்துக்களை கூர்ந்து கவனித்தால் ஒரு விடயத்தை கண்டுபிடிக்க கூடியதாக உள்ளது. என்னவெனில், பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்க முடியாது இருப்பதாகவும் அதன் விளைவுதான் இவ்வாறான போதைப் பொருள் பாவனை என்ற தொனிப்பட பலரும் கருத்து தெரிவிக்கிறார்கள். கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும் உட்பட பெரும்பாலானவர்கள் அவ்வாறான கருத்துக்களை கொண்டிருப்பதாக தெரிகிறது. ஆசிரியரின் கையில் இருந்த பிரம்பு பறிக்கப்பட்டதால்தான் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் பாடசாலை மட்டத்துக்கு பரவியுள்ளன என்று ஒரு பகுதியினர் எழுதுகிறார்கள். கல்வி அதிகாரிகளுக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் வகுப்பெடுக்கும் உயர் அதிகாரிகள் மாணவர்களை தண்டிக்க கூடாது என்று கூறிவிட்டு இப்பொழுது போதைப்பொருள் பாவனை தொடர்பான புள்ளி விவரங்களை ஒப்புவிக்கிறார்கள் என்று வேறொரு குறிப்பு கூறுகிறது.

இக்கருத்துக்கள் எல்லாமே தொகுப்பாக கூற வருவது ஒரு விடயத்தைத்தான். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் கண்டிப்பாக நடந்தால் இது போன்ற விடயங்களை கட்டுப்படுத்தலாம் என்பதுதான்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் மீது உடல் ரீதியாக அல்லது உளரீதியாக வன்முறைகளை பிரயோகிப்பதற்கு எதிரான சுற்றுநிருபம் 2005 ஆம் ஆண்டு கலாநிதி.தாரா டி மெல் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த காலகட்டத்தில் கூர்மையான விதங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சுற்று நிருபமானது ஆசிரியர்களின் கைகளை கட்டி போடுகிறது என்ற ஒரு விமர்சனம் ஆசிரியர் சமூகத்தின் மத்தியிலும் ஏன் பெற்றோர் மத்தியிலும்கூட உண்டு.

கண்டிப்பான ஆசிரியரே நல்லாசிரியர் என்று அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக பதிந்திருக்கிறது. கண்டிப்பான ஆசிரியர்களே வெற்றி பெற்ற ஆசிரியர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள்.

நாட்டில் உள்ள கல்வி முறையானது பரீட்சையை மையமாகக் கொண்டது. பரீட்சை மைய கல்வியை பொறுத்தவரை சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுப்பவரே கெட்டிக்கார ஆசிரியர். அந்த சிறந்த பெறுபேறுகளை அவர் எப்படியும் பெற்றுக் கொடுக்கலாம் என்று பெரும்பாலான பெற்றோர் கருதுகிறார்கள். இதனால் சிறந்த கல்விப் பெறுபேறுகளுக்காக அதிகம் பலியிடப்படுவது மனித உரிமைகள் என்பதனை பெரும்பாலான பெற்றோர் பொருட்படுத்துவதில்லை. அதனால் தேசியமட்ட பரீட்சைகளை நோக்கி மாணவர்களை தயார்படுத்தும் தனியார் கல்வி நிறுவனங்களிலேயே மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றன.

இப்படிப்பட்டதோர் கல்விச் சூழலில் தண்டனை குறைக்கப்பட்டதால் பிள்ளைகள் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகினர் என்ற கூற்று மேலோட்டமாக பார்த்தால் சரியாகவே தோன்றும். சில நாட்களுக்கு முன் ஆந்திராவில் கஞ்சா பாவிக்கும் தனது 15 வயது மகனை அவருடைய தாயார் வீட்டில் ஒரு கம்பத்தில் கட்டி வைத்து அவருடைய கண்களுக்குள் ஒரு மிளகாய் தூளைத் தூவினார். இது ஊடகங்களில் பரவலாக வெளிவந்தது. இது போன்ற தண்டனைகள் மூலம்தான் மாணவர்களை மட்டுமல்ல பாடசாலை நீங்கிய இளையவர்களையும், ஏன் ஒட்டுமொத்த சமூகத்தையும் கட்டுப்படுத்தலாம் என்ற ஒரு கருத்து பரவலாக உண்டு.

ஆனால் தனிய தண்டனைகளால் மட்டும் இந்த விவகாரத்தை கையாள முடியாது. ஏனெனில் பிரச்சினையின் வேர்கள் மிக ஆழமானவை. அந்த வேர்களைத் தேடிப் போனால் யாரைத் தண்டிப்பது என்ற கேள்வி எழும். நுகர்வோரை தண்டிப்பதா? அல்லது விற்பனையாளர்களை தண்டிப்பதா? அல்லது திட்டமிட்டு மாணவர்களை குறி வைத்து போதைப்பொருள் வலைப் பின்னலைக் கட்டியெழுப்பும் அரசியல் உள்நோக்கமுடைய சக்திகளைத் தண்டிப்பதா? யாரை தண்டிப்பது?

இப்பிரச்சினையின் வேர் மிக ஆழமானது. 2009 க்கு பின்னரான தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை,

முதலாவதாக தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று நிலவுகிறது.

இரண்டாவதாக உலகில் அதிகம் படைமயமாக்கப்பட்ட ஒரு அரசியல் ராணுவ சூழலுக்குள் தமிழ் சமூகம் வாழ்கிறது. நாட்டின் படைக்கட்டமைப்பின் மொத்த தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு கிழக்கில் காணப்படுவதாக ஒரு புள்ளிவிபரம் உண்டு.

மூன்றாவதாக மேற்சொன்ன ராணுவ மயப்பட்ட சூழல் காரணமாக படைத்துறை புலனாய்வாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் தமிழ்ச்சமூகம் காணப்படுவது.

நாலாவதாக ஆயுத மோதல்களுக்கு முன்னிருந்த ஒரு சமூகக் கட்டமைப்பு குலைந்து போய்விட்டது. ஆயுதப் போராட்டம் புதிய விழுமியங்களையும் ஒரு புதிய சமூக ஒழுங்கையும் உருவாக்க முற்பட்டது. 2009ல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், ஏற்கனவே இருந்த சமூக கட்டமைப்பும் குலைந்து இடையில் ஆயுதப் போராட்டம் கொண்டு வந்த புதிய ஒழுங்கும் குலைந்து இப்பொழுது ஏறக்குறைய எல்லாச் சமூக கட்டமைப்புகளும் குலைந்து போன ஒரு நிலை காணப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் விழுமியங்களை மீழுருவாக்க வேண்டிய ஒரு சமூகமாக தமிழ் சமூகம் மாறியிருக்கிறது.

ஐந்தாவதாக, உலகலாவிய தகவல் தொழிநுட்பப் பெருக்கத்தின் கைதிகளாக இளையோர் காணப்படுவது.

மேற்கண்ட ஐந்துகாரணங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். தமிழ் மக்களை தொடர்ந்தும் அரசியல் ரீதியாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதாகவும் போதைப்பொருள் வலைப் பின்னலை அவர்களே நிர்வகிப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் ஏன் முன்வைத்து வருகிறார்கள் என்ற கேள்விக்கும் விடை கிடைக்கும்.

எனவே போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது என்பது தனிய தண்டனைகளால் மட்டும் சாத்தியமான ஒன்று அல்ல. அது ஒரு கூட்டுச் செயற்பாடாக அமைய வேண்டும்.

முதலாவதாக சமூகப் பிரதிநிதிகள் மக்கள் பிரதிநிதிகள் செயற்பாட்டாளர்கள் மதப் பெரியோர்கள் மத நிறுவனங்கள் புதுஜீவிகள் கலைஞர்கள் ஊடகங்கள் என்று எல்லா தரப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுச் செயற்பாடாக அதை முன்னெடுக்க வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் அல்லது செயற்பாட்டாளர்கள் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில்தான் போதைப் பொருள் பாவனை பாடசாலைகள் வரை வந்துவிட்டது.

போதைபொருள் பாவனை மட்டுமல்ல வாள் வெட்டு கலாச்சாரத்தின் பின்னால் உள்ள உளவியலைத் தீர்மானிக்கும் அம்சங்களும் மேற்கண்டவை தான்.

இளம் வயதினரின் வேகங்களுக்கு ஈடு கொடுத்து அவர்கள் மத்தியில் இலட்சியங்களை விதைத்து விழுமியங்களை மீழுருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மதகுருகளுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் உண்டு. ஆனால் அந்த பொறுப்பை அந்தக் கூட்டுப் பொறுப்பை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்?

பாடசாலைகளில் தண்டனை நீக்கப்பட்டதை குறித்து முறையிடுகிறோம். ஆனால் ஒரு காலம் எமது பிள்ளைகள் தனியாக பள்ளிக்கூடங்களுக்கு போனார்கள். டியூட்டரிகளுக்கு போனார்கள். பெற்றோர் அவர்களை காவிச் செல்லும் ஒரு நிலைமை இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது எல்லா அம்மாக்களும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளை பூனை குட்டியைக் காவுவது போல இரவும் பகலும் காவுகிறார்கள். ஏன் காவுகிறார்கள்? கல்வி மீது கொண்ட தாகம்தான் காரணம். ஆனால் அந்த கல்வி எத்தகையது? கல்வி பற்றிய தமிழ்ச்சமூகத்தின் அளவுகோல்கள் சரியானவைகளா? இந்த கல்விமுறைக்கூடாக உருவாக்கப்பட்ட ஆளுமைகள் எப்படிப்பட்டவை? இதைக் குறித்த ஒரு சரியான மீளாய்வு தமிழ் சமூகத்திடம் உண்டா? இல்லை. கல்வி தொடர்பாகவும் விழுமியங்களை மீழுருவாக்குவது தொடர்பாகவும், சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் கூட்டுத்திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அவற்றை வகுப்பதற்கான அதிகாரம் இல்லை என்று சொல்லிக்கொண்டு 13 ஆண்டுகளை கடந்து வந்து விட்டோம். நாங்களாக சுயகவசங்களை உருவாக்க தவறிவிட்டோம். அந்த வெற்றிடத்தில்தான் போதைப்பொருள் வலைப் பின்னலும் வாள் வெட்டுக் குழுக்களும் விளைகின்றன.

எனவே பிரச்சினயின் வேர்களைத் தேடிப் போனால் முழுச் சமூகமும் அதன் கூட்டுப் பொறுப்பை இழந்து விட்டதை காணலாம். உங்களுடைய பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையே ஒரு வெளியாள் போதைப் பொருளை, வாளைக் கொடுக்கிறான் என்றால் உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ ஒரு இடைவெளி இருக்கிறது என்று பொருள். உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ தொடர்பாடல் அறுந்து விட்டது என்று பொருள். நீங்கள் பிள்ளையோடு மேலும் கூடுதலாக நேரத்தை செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று பொருள். பிள்ளைகளை இரவு பகலாக வகுப்புகளுக்கு காவி செல்கிறீர்கள். ஆனால் பிள்ளைகளோடு மனம் விட்டு கதைக்கின்றீர்களா?

பூனை குட்டியைக் காவுவது போல பிள்ளைகளை காவுகிறோம். சிறந்த கல்விப் பெறுபேறுக்காக மனித உரிமைகளை பலி கொடுக்க தயாராக இருக்கிறோம். அந்த கல்விப் பெறுபேறுகளின் விளைவாக நாங்கள் உருவாக்கிய ஆளுமைகள் எத்தகையவை என்ற கேள்வியை எப்பொழுதாவது எங்களை நோக்கி கேட்டிருக்கிறோமா?

இதுதான் பிரச்சினை. ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு சமூகத்தை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பிலிருந்து அரசியல்வாதிகள் தவறி விட்டார்கள். செயற்பாட்டாளர்கள் தவறி விட்டார்கள். மதகுருக்கள் தவறி விட்டார்கள். மதபோதர்கள் தவறி விட்டார்கள். புத்திஜீவிகள் தவறி விட்டார்கள். ஊடகவியலாளர்கள் படைப்பாளிகள் தவறி விட்டார்கள்.

போதைப் பொருளிலிருந்து பிள்ளைகளை விடுவிப்பதென்றால் புனர்வாழ்வும் மட்டும் போதாது. தண்டனைகளால் பலன் இல்லை. மாறாக சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். விழுமியங்களை மீழுருவாக்க வேண்டும். இளையோருக்கு முன்னுதாரணம் மிக்க தலைவர்கள் மேலெழ வேண்டும். திரைப்பட நாயகர்களையும் சண்டிகர்களையும் முன்னுதாரணமாகக் கொள்ளும் வெற்றிடம் ஏன் ஏற்பட்டது? எனவே இளையோரை இலட்சியப் பற்று மிக்கவர்களாகவும், உன்னதமான சமூகக் குறிக்கோளை நோக்கி எய்யப்பட்ட அம்புகளாகவும் மாற்றுவதற்கு தனியாக ஆசிரியர்களால் மட்டும் முடியாது. மருத்துவர்களால் மட்டும் முடியாது. உளவளத் துணையாளர்களால் மட்டும் முடியாது. புனர்வாழ்வு நிலையங்களால் மட்டும் முடியாது. அது ஒரு கூட்டுப் பொறுப்பு.

ஜெனிவாவில் அரசாங்கத்தை பொறுப்பு கூற வேண்டும் என்று கேட்கும் ஒரு சமூகம், தான் சம்பந்தப்பட்ட விடயங்களில் தனக்குள்ள கூட்டுப் பொறுப்பையும் உணர வேண்டும். கீழிருந்து மேல் நோக்கிய சுய பாதுகாப்புக் கவசங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.


**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers - and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868



# இலங்கையில் பெற்றோலைப் போன்று முட்டைக்கும் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

இலங்கையில் பண்ணைக்கு தேவையான கோழிகளின் இறக்குமதி குறை வடைந்துள்ளதால் எதிர்காலத்தில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது பண்ணைகளுக்கு சொந்தமான கோழிகளும் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுவதாக அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

கோழிப்பண்ணை உற்பத்திக்குத் தேவையான கோழிகளின் இறக்குமதி 80,000லிருந்து 10,000 ஆக குறைக்க பட்டுள்ளதாகவும் இலங்கையின் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கோழிப்பண்ணை தொழிலின் எதிர்காலம் குறித்து தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதியில் பால் புரையேறி 10 மாத குழந்தை பலி!

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று மா முனை பகுதியில் பால் புரையேறியதில் 10 மாதங்களேயான குழந்தை சனிக்கிழமை (24) உயிரிழந்துள்ளது.

பால் கொடுக்கப்பட்ட போது புரையேறி மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது என யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் குறித்த குழந்தை பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மரண விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இதனை சதானந்தம் தெரிவித்தார்.



# திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள் எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம்

## ஐங்கரநேசன் ஆதங்கம்





திலீபனின் நினைவேந்தலில் ஏற்பட்ட குழப்பங்களும் அதையொட்டிய ஊடகச் சந்திப்புகளும் பேரினவாதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், தமிழ் மக்கள் இவற்றால் வெட்கித் தலை குனிந்துள்ளார்கள். திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள். அவர்களால் மக்கள் மனங்களிலிருந்து நினைவுகளை அழிக்க முடியவில்லை. ஆனால், எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தியாக திலீபன் நினைவேந்தல் குழப்பங்கள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் எந்நாளும் நினைவுகூரப்படவேண்டியவர்கள். இது வெறுமனே நினைவுகளை மனத்திரையில் மீட்கும் சடங்குகள் அல்ல. மாறாக, அவர்களின் போராட்ட நியாயங்களையும் போராட்டத் தியாகங்களையும் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்ற உயிர்ப்பான அரசியற் செயற்பாடுகளுமாகும்.

அரசியற் காரணங்களுக்காகப் போராடி மடிந்தவர்களின் நினைவேந்தல்களில் அரசியல் நீக்கம் செய்வது அவர்களின் போராட்ட நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். இத்தகைய நினைவேந்தல்களில் இனத்துவ அரசியலைத் தாண்டிக் கட்சி அரசியல் மேலோங்குவது போராட்டத் தியாகங்களைச் சூறையாடுவதாகும். ஆனால், துரதிர்ஷ்டமாகத் தமிழ்த்தேசிய அரசியற் களத்தில் இன்று இவையே அதிகம் நிகழ்ந்தேறுகின்றன.

நினைவேந்தல் குழப்பங்களுக்கு யார் காரணம் என்ற கேள்விக்கும் அப்பால் இவை நிகழ்ந்திருக்கவே கூடாது என்பதுதான் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வேதனைக் குரலாக உள்ளது. கட்சி வேறுபாடுகள் தாண்டிப் பேரினவாதிகள் ஒன்றுபட்டு நினைவேந்தியவர்களைக் கைதுசெய்யுமாறு கொக்கரிக்கிறார்கள். ஆனால், நாமோ பொது நினைவேந்தல்களிற்கூட ஒன்றுபட முடியாமல் தமிழ்த்தேசியத்தை மழுங்கடித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்களின் சஷ்டியப்த பூர்த்தி மங்கள நிகழ்வு

கனடிய செய்திகள்
Canadian News



கனடாவில் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்ப் பணியும் சைவப் பணியும் ஆற்றிய வண்ணம் எம்மவர் மத்தியில் மொழியையும் சமயத்தையும் ஆன்மீகத்தோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் எம்மவர்களை தூண்டும் ஒரு சக்தியாக விளங்கி வருபவர் ஸ்காபுரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் அவர்கள்.

அன்னாரது 60வது அகவை பூர்த்தி விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பெற்ற சஷ்டியப்த பூர்த்தி மங்கள வைபவ நிகழ்வு தொடர்பாக சிவாச்சாரியப் பெருமக்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்பெறும் விசேட நெறிகள் அடங்கிய கிரியைகள் மற்றும் சடங்குகள் அடங்கிய பெருவிழா 27-09-2022 திங்கட்கிழமையன்று காலை 10.00 தொடக்கம் கனடா கந்தசாமி கோவில் கலாச்சார மண்டபத்திலும் ஆலயத்தின் பிரதான வழிபாட்டு தலத்திலும் சிறப்புற நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான சிவாச்சாரியப் பெருமக்கள் அவர்கள் குடும்பத்தினர் மற்றும் அழைக்கப்பெற்ற வர்த்தகப் பெருமக்கள் மற்றும் ஊடகவியலாளர் குடும்பத்தினர் கலைஞர்கள் உறவினர்கள் ஐந்நூறுக்கும் அதிகமான சபையினர் கலந்து கொண்டனர்.

மொத்தத்தில் ஒரு சமூகத் தொண்டனாகவும் வழிகாட்டியாகவும். மனித நேயம் கொண்டவராகவும் விளங்கும் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் அவர்கள் மற்றும் துணைவியார் ஜெயந்தி அம்மா ஆகியோர் மணக்கோலத்தில் மீண்டும் தோன்றிய காட்சிகள் கண்கொள்ளாத பெருமிதமாகத் தோன்றியது.













# மன்னார் சர்வோதயத்தில் ஊழல் செயற்பாடுகள் — அனைத்து ஊழியர்களும் பதவி விலகினர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




மன்னார் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான சர்வோதய நிறுவனத்தில் பணியாற்றும் நான்கு ஊழியர்களும் மன்னார் சர்வோதயத்தில் இடம் பெறும் பல்வேறு ஊழல் செயற்பாடுகளை முன்னிறுத்தி பதவி விலகி உள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், இலங்கையில் செயற்பட்டு வரும் மிகப்பெரிய அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான சர்வோதயம் மன்னார் சர்வோதயத்தின் ஊடாக மாவட்ட ரீதியில் பல செயற்திட்டங்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை மன்னார் சர்வோதய மாவட்ட பணிப்பாளர் ஒழுங்கான முறையில் விடுவிப்பதில்லை என சக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் தொண்டு நிறுவனங்களால் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளை கூட ஒழுங்காக வழங்குவதில்லை எனவும் இது தொடர்பாக பணியாற்றும் ஊழியர்கள் கேள்வி எழுப்புகின்ற போது முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் தெரிவிப்பதாகவும் அதே நேரம் பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் உத்தியோகத்தர்களுக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்ததாகவும் தெரிவித்து அணைத்து ஊழியர்களும் பதவி விலகி உள்ளனர்.

மேலும் தொடர்ந்து பிழைகளை சுட்டிக்காட்டும் ஊழியர்களை பழிவாங்குவங்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கி விரிவான கடிதம் ஒன்றை சர்வோதய நிறுவனத்தின் தேசிய காரியாலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளது டன் மாவட்ட காரியாலயத்தில் பதவி விலகல் கடிதங்களையும் கையளித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

# "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" 59 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் திருகோணமலையில் முன்னெடுப்பு







"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 59வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (28.09.2022) திருகோணமலை சலப்பை ஆற்று பகுதியில் இடம்பெற்றது.

இச் செயற்றிட்டத்தில் திருகோணமலை சலப்பை பகுதி மக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் விவசாய மற்றும் மீனவ அமைப்புகள், என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதன் போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம், எமக்கு வேண்டும், எங்கள் நிலம், ஒன்று கூடுவது எமது உரிமை, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும், போன்ற பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

# தவிசாளர் நிரோஷிற்கு எதிரான மாவீரர் தின நினைவேந்தல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்



கடந்த ஆண்டு மாவீரர் தினம் நினைவேந்தல் தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கும் முடிவுறுத்தப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றில் கடந்த ஆண்டு மாவீரர் தினம் அனுஷ்டிப்புத் தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன்கிழமை (28.09.2021) மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ள்பட்டது. அவ் வழக்கில், அச்சுவேலி பொலிசாரின் மேலதிக அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சட்டம் ஒழுங்கை மீறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மல்லாகம் நீதிமன்றம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ' விடுவித்தது.

கடந்த (2021) மாவீரர் தினத்திற்கு முன்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராக அவர் உள்ளிட்டவர்கள் குற்றவியல் சட்டக் கோவை சரத்து 106, பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் கொவிட் தொற்று சட்ட ஏற்பாடுகளையும் அறிவுறுத்தல்களையும் மீறி மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவித்து, அதற்குத் தடை விதிக்குமாறு (வழக்கு இல AR 1577/21) மன்றில் விண்ணப்பித்திருந்தனர். அதனை ஆட்சேபித்து கடந்த ஆண்டு சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா தலைமையில் சட்டத்தரணி திருக்குமரன் உள்ளிட்ட குழாம் எதிர்த்து வாதிட்டிருந்தது.

அவ் வழக்கில், (கடந்த ஆண்டு) குற்றவியல் சட்டக்கோவையின் மேற்படி சரத்தின் பிரகாரம் குற்றம் இழைப்பதற்கான வலுவான சாட்சியங்கள் இணைக்கப்படவில்லை என்றும் அரசியல் அமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நினைவு கூர்வதற்கான உரிமையினை மறுக்க முடியாது எனவும் ஏற்கனவே வலுவில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் வர்த்தமானி அறிவுறுத்தல்களையும் சகலரும் கடைப்பிடிக்க வேண்டியவர்கள் எனவும் தெரிவித்திக்கப்பட்டிருந்தது. மேலும், எவராவது சட்டத்தை மீறினால் பொலிசார் கைது செய்ய முடியும் எனவும் பொலிசாருக்கு மன்று தெரிவித்திருந்தது. அவ்வாறு நீதிமன்று தெரிவித்திருந்த நிலையில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு கடந்த 14 ஆம் திகதி மீளவும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 14 திகதி வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கில் நிரோஷ் சட்டம் ஒழுங்கை மீறியுள்ளாரா என பொலிசாரிடம் நீதிபதியினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந் நிலையில் அடுத்த தவணையான புதன்கிழமை வழக்கு அழைக்கப்பட்ட போது மேலதிக அறிக்கையினை அச்சுவேலி பொலிசார் தாக்கல் செய்தனர். அதனை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கு இனி அழைக்கப்படமாட்டாது எனத் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா பாடசாலை ஒன்றில் அதிபரின் தாக்குதலுக்கு இலக்கான மாணவி வைத்தியசாலையில்



நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கொட்டகலை - போகாவத்த பிரதேச பாடசாலை ஒன்றில் தரம் 10 ல் கல்வி பயிலும் மாணவி ஒருவர், அதிபரின் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுடன் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என, கொட்டகலை பிரதேச வைத்திய அதிகாரி சாவித்ரி சர்மா தெரிவித்துள்ளார்.


பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர் தின நிகழ்வுக்காக தனது சகோதரர் 300 ரூபாய் செலுத்தவில்லை என தெரிவித்து, குறித்த அதிபர் மாணவியின் சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதையடுத்து "சேர் எனது சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்ட வேண்டாம் என்றும் எனது தந்தை அருகில் வேலை செய்வதால் அவரிடமிருந்து பணத்தை வாங்கி தருவதாக" குறித்த மாணவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே அதிபர் குறித்த மாணவியை பிரம்பால் அமானுஷ்யமாக தாக்கியதாகவும் இதனையடுத்து பாடசாலைக்கு அருகில் வேலை செய்துகொண்டிருந்த மாணவியின் தந்தை, மகளின் அலறல் கேட்டு, பாடசாலைக்கு ஓடி மாணவியை காப்பாற்றிய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவியுடன் தனக்கு 4 குழந்தைகள் இருப்பதாக தெரிவித்த அத் தந்தை பொருளாதார பிரச்சனையில் தான் இருப்பதுடன், தனது மனைவி வெளிநாட்டில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன், தனது மகள் தாக்கப்பட்டமை தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை அதிபரிடம் வினவியபோது, குறித்த மாணவியை சிறு தடி ஒன்றில் தாக்கியதாக அதிபர் தெரிவித்துள்ளார்.



# மார்க்கம் நகரசபையில் வாக்களிக்கக்கூடிய 4 பிராந்திய கவுன்சிலர்களில் நல்லதோர் வேட்பாளரான

# ஜிம் ஜோன்ஸ் (Jim Jones) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் மார்க்கம் பிராந்தியத்தில் பிராந்தியக் கவுன்சிலராக (Regional Councilor) மீண்டும் போட்டியிடும் ஜிம் ஜோன்ஸ் அவர்கள் இந்த நகரசபை எல்லைக்குள் தனது கடந்த சேவைக் காலங்களில் நல்ல போக்குவரத்து, மற்றும் மார்க்கம் நகரத்தில் அமைய உள்ள யோர்க் பல்கலைக்கழகம், விளையாட்டு மையம், சமூக மையங்கள், நிலையான வளர்ச்சி ஆகியவற்றிற்காக கடுமையாக உழைத்து வருகின்றார். தொடர்ந்தும் அவர்கள் உழைப்பதற்கு தயாராக உள்ளார். ஜிம் ஜோன்ஸ் அவர்கள் ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி ஆவார், மேலும் தற்போது ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப்பாதையை வடக்கு நோக்கி விஸ்த்தரிக்கும் திட்டத்தைத் தொடங்கியவரும் இவரே.

மேலும், தமிழ் இனப்படுகொலையின் காரணத்தால் தங்கள் உயிர்களை இழந்த தமிழ் மக்களை ஞாபகப்படுத்தும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதற்க்காக போராடியதன் காரணமாக கனடா வாழ் தமிழ் சமூகத்தால் நன்கு அறியப்பட்டவர்.

நமது குழந்தைகள் சிறந்த வாழ்க்கை மற்றும் கல்வியைப் பெற அயராது உழைக்கும் கடின உழைப்பாளியான ஜிம் ஜோன்ஸ் அவர்கள் தற்போதைய பிராந்திய கவுன்சிலர்களில் சிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்குத. ஜிம் ஒரு நியாயமான அங்கத்தவர்கள் கொண்ட மாநகர சபையை விரும்புகிறார், மேலும் மார்க்கம் நகர சபையிலும் பிராந்தியத்திலும் உங்களை பிரதிநிதித்துவப்படுத்த ஜிம் ஜோன்ஸ் அவர்களுக்கு வாக்களிக்க உங்களுக்கு வாய்ப்பு கிட்டி உள்ளது.

நீங்கள் வாக்களிக்கக்கூடிய 4 பிராந்திய கவுன்சிலர்கள் உள்ளனர், எனவே தயவு செய்து நல்லதோர் வேட்பாளரான ஜிம் ஜோன்ஸ் அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.

**அவரது தொலைபேசி இலக்கம்: (416) 725-5930**



**RE-ELECT**

**JIM JONES: MARKHAM REGIONAL COUNCILLOR**

jimjones | @jimjones2022 | www.jimjones.ca

# மார்க்கம் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்



தீபக் தல்ரேஜா அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒரு விளையாட்டு வீரனாகத் திகழ்கின்றார். விளையாட்டு அனைவரையும் ஒன்றிணைக்கிறது மற்றும் வேறுபாடுகளைக் குறைக்க உதவுகிறது, நம்மைச் சுற்றியுள்ள பலரின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கிறது. மிக முக்கியமான விடயம், விளையாட்டு வீரர்கள் மற்றவர்களை கைவிட மாட்டார்கள். ஒரு சிறந்த தடகள வீரராக, பல்வேறு விளையாட்டுகளில் பல பதக்கங்கள் மற்றும் உலகக் கோப்பைகளில் வெற்றி பெற்றுள்ள இவர் ஒரு மனித நேயமிக்க ஒருவர்.

சிட்னி நோவா ஸ்கோசியாவில் சிட்னி நகரில் உள்ள கேப் பிரெட்டன் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சங்க சர்வதேச மாணவர் ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் எமது வேட்பாளர் தீபக் தல்ரேஜா அவர்கள். அத்துடன் அவர் பல்வேறு இலாப நோக்கற்ற மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் தலைமைப் பாத்திரங்களில் பணியாற்றி வருகின்றார்.

மேலும், தீபக் தல்ரேஜா அவர்கள கடந்த பத்து ஆண்டுகளாக யோர்க் பிராந்திய காவல்துறையில் ஒரு சிறப்பு நிகழ்வுகள் மற்றும் சின்னமாக தன்னார்வத் தொண்டு செய்து வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத.

**நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8 Markham Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

அவரது தொலைபேசி இலக்கம்: **(416) 452-0206**

REGISTER TO CONFIRM YOUR VOTER IDENTIFICATION NUMBER :

1.) Confirm the accuracy of the information.
2.) Update your residence address information.
3.) Add your name to the Municipal Voters List.





# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING


UTHAYAN INTERNATIONAL
AWARDS FESTIVAL-2022
Title Sponsor
Presented by
Powered by
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022
TEAM BLUE FORCE
teamblueforce.ca
RE/MAX REALTRON BLUE FORCE
416 333 6660
VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
MAHAANS +1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில்
தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய்
எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.
16 வது ஆண்டில்
கனடா உதயன்
சர்வதேச விருது விழா
உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள
உதயன் விருதுகளின் பட்டியல்
UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - QUEBEC
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - SRI LANKA
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - TAMIL NADU
விருது வழங்கலும்
இராசப்போசன
விருந்தும் கலை
நிகழ்ச்சிகளும்
இடம்பெறும்
'Rhythm of Rishi'
Veenai isai
வீணை இசை
Saturday
October 15th,
2022 at 6.00 pm
Co-Presented by
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
இவ்விழா நடைபெறும் மண்டபம்
Kennedy Convention Centre
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)
For More Information,
call 416 732 1608 or 647 762 9512

Tasty தமிழா

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்



தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

Carefirst Family Health Team



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# ஜெனீவா தீர்மானங்கள் சார்ந்து இலங்கையின் கடந்த காலமும் எதிர்காலமும் (பகுதி 1)

சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்

(8 பக்கத் தொடர்ச்சி)

• தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஐ.நாவுடன் ஒத்துழைக்கும் இலங்கையர்களைப் பாதுகாக்குமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தல்.

• தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்பு வழங்கியமைக்காக பழிவாங்கல்களுக்கு முகங்கொடுக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவு அடிப்படையிலான பொறிமுறைகளை நிறுவ ஐ.நா. உறுப்பு நாடுகள் மற்றும் ஐ.நா. அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தல். தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இது மிகவும் அவசியமாகும்.

• மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான சமீபத்திய அறிக்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க புதிய சேர்க்கைகளில் ஒன்றாக "பொருளியல் குற்றங்கள்" என்ற வார்த்தையைப் பிரயோகித்தல்.

• பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுகையில், போர்க்கால அட்டூழியங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் ஆகியவற்றை விசேடமாகக் குறிப்பிடுதல். (செயற்பாட்டுப் பந்தி [OP] 8)

• இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆகியவற்றுக்கு இடையேயான பணிக்குழாம் மட்டத்திலான உடன்படிக்கையை வரவேற்கும்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் காரணமாக மனித உரிமைகள் மீது ஏற்படத்தக்க எதிர்மறை தாக்கங்களுக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பான எச்சரிக்கை செய்தல் (முன்னுரை பந்தி [PP] 8).

• அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும்போது முன்னைய அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்களது உள்ளீடு மற்றும் பணிகளை கருத்திற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை கவனித்தல் (முன்னுரை பந்தி 13).

• ஐ.நா. விசேட நடைமுறைகளின் பரிந்துரைகளை (பரிசீலிப்பதோடு மட்டும் நில்லாது) நடைமுறைப்படுத்தவும், ஐ.நா. கூட்டு ஒப்பந்த அமைப்புகளால் செய்யப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்குவதற்கும் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தல் (செயற்பாட்டுப் பந்தி 2).

• சிவில் சமூகத்தை வேவு பார்த்தல், அச்சுறுத்துதல் மற்றும் துன்புறுத்துதல் என்பன தொடர்பில் அக்கறையை வெளிப்படுத்தும்போது மாணவர் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மதத் தலைவர்கள், வழக்கறிஞர்கள், காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஆகியோரை விசேடமாகக் குறித்துரைத்தல் மற்றும் அவர்களது பாதுகாப்புக்காக அழைப்பு விடுத்தல் (செயற்பாட்டுப் பந்தி 5 மற்றும் செயற்பாட்டுப் பந்தி 13).

• தாமதங்கள் மற்றும் ஜனாதிபதி மன்னிப்பு (OP7) ஆகியவற்றுக்கு மேலதிகமாக அடையாள வழக்குகளில் சட்டமா அதிபரும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவும் குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுவதனால் நீதி குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுவது பற்றி குறிப்பிடுதல் (செயற்பாட்டுப் பந்தி 7).

• அடையாள வழக்குகள் மற்றும் ஊழல் தொடர்பான வழக்குகளில் வழக்குத்தொடுத்தல் தொடர்பில் குறிப்பிடும்போது இவ் அனைத்து வழக்குகளிலும் வழக்குத்தொடுத்தல் நிகழ வேண்டுமென்பதால் பிரயோகிக்கப்பட்டிருக்கும் இடங்களில் "எனின்" என்ற வார்த்தைகளை அகற்றுதல் (செயற்பாட்டுப் பந்தி 10 மற்றும் செயற்பாட்டுப் பந்தி 11).

• 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாவது அமர்விற்குப் பதிலாக 2023 மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 52ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான அடுத்த வாய்மொழி மூலமான முன்னேற்ற அறிக்கையை முன்வைக்குமாறு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தைக் கோருதல் (செயற்பாட்டுப் பந்தி 18).

## முன்னோக்கிய வழி

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் அணுகுமுறையானது மேலும் கால அவகாசம் கோருதல் மற்றும் புதிய வாக்குறுதிகளை வழங்குதல் என்பதாகவே தெரிகிறது. ஆனால், களத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளாது வழங்கப்படும் வாக்குறுதிகள் பெரிதாக கருத்திற்கொள்ளப்பட வாய்ப்பில்லை.

உதாரணமாக, மூன்று மாதங்களுக்கு முன் ஜூன் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி அமர்வில் அன்றைய வெளியுறவு அமைச்சர் பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் (PTA) கீழ் கைது செய்வதை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். ஆனால், கடந்த மாதம் மூன்று மாணவர் தலைவர்கள் PTA இன் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 2015ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கம் (பிரதமராக விக்கிரமசிங்கவும் இருந்தார்) வெளிநாட்டு நீதிபதிகள், பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள், அங்கீகரிக்கப்பட்ட வழக்குத்தொடுநர்கள் மற்றும் புலனாய்வாளர்களைக் கொண்ட நீதித்துறை பொறிமுறையை அமைக்க ஒப்புக்கொண்டது. ஆனால், வரைவுச் சட்டத்தை கூட நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை ஆகியவற்றின் கண்காணிப்பு மற்றும் விமர்சனபூர்வமான கருத்துரைகளை நிறுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கான ஒரே வழி தற்போது நிகழ்ந்துவரும் உரிமைகள் தொடர்பான மீறல்களை நிறுத்துவது அல்லது குறைந்தபட்சம் குறைப்பது மற்றும் போர்க்கால அட்டூழியங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், பொருளியல் குற்றங்கள், ஊழல், ஒடுக்குமுறை உள்ளிட்ட கடந்தகால உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையையும் நீதியையும் உறுதிப்படுத்துவது மட்டுமே ஆகும்.

SV.Varman's
MIDI MELODIES
music studio
Professional Musicians With Digital Technology

விஜயதசமி விழா

புதிய இசை வகுப்புக்கள்

எதிர்வரும் விஜயதசமி தினத்தை முன்னிட்டு
04-Oct-2022 Tuesday அன்று (6 to 10) pm
புதிய இசை வகுப்புகள் ஆரம்பம்.


Keyboard


Drums


Guitar


Vocal
(Carnatic music)

Place:
605-Middlefield,Unit-14
M1V 5B9
(Finch / Middlefield)
கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில்

For further information
SV.Varman
(Music Director & Sound Engineer)
Cell- 416-579-6059

# பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு தடை எதிரொலி : தமிழகம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு

பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டதையடுத்து தமிழகம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு மத்திய அரசு நேற்று 5 ஆண்டுகள் தடை விதித்துள்ளது. இதையடுத்து தமிழகம் முழுவதும் போலீஸார் உஷார்படுத்தப்பட்டனர். மத்திய அரசின் தடை உத்தரவுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற வாய்ப்புள்ளதாக உளவு பிரிவு போலீஸார் தெரிவித்து இருந்தனர். இதையடுத்து டிஜிபி சைலேந்திரபாபு அனைத்து மண்டல ஐஜிக்கள், காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்பிக்களுக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்தார்.

அதில், அனைத்து போலீஸ் அதிகாரிகளும் தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும். ரோந்து மற்றும் கண்காணிப்பு பணிகளை முடுக்கி விட வேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளதாக சந்தேகப்படும் நபர்கள் யாராக இருந்தாலும் அவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் கீழ் கைது செய்ய வேண்டும். பொது மக்கள் பாதிக்காத வகையில், அனைத்து தரப்பு மக்களும் சுதந்திரமாக செயல்பட, பணிகளை கவனிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். இதையடுத்து தமிழகம் முழுவதும் கண்காணிப்பு பணியை போலீஸார் முடுக்கி விட்டுள்ளனர்.

பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பை சேர்ந்தவர்கள் வெவ்வேறு இடங்களில் சுமார் 500 பேர் திரண்டனர். மத்திய அரசின் தடை உத்தரவை கூறி அவர்களை போலீஸார் அனுப்பிவைத்தனர். மேலும், தமிழகம் முழுவதும்




மத்திய அரசு அலுவலகங்கள், முக்கிய நிர்வாகிகளின் அலுவலகங்கள், வீடுகளுக்கும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.கோவையில் 6 எஸ்.பிக்கள்: இதேபோன்று, கோவையில் உக்கடம், கோட்டைமேடு, சாய்பாபாகாலனி என்.எஸ்.ஆர் சாலை ஆகிய இடங்களில் உள்ள பிஎஃப்ஐ மாவட்ட தலைமை அலுவலகங்கள் முன்பு போலீஸார் நிறுத்தப்பட்டனர். மாநகர பகுதியில் காவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன் தலைமையில் அனைத்து பிரிவுகளையும் சேர்த்து 3,500 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

உக்கடம், போத்தனூர், குனியமுத்தூர், செல்வபுரம், ரத்தினபுரி, கடைவீதி, ஆர்.எஸ்.புரம் என 7 காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகள் பதற்றம் நிறைந்தவையாக கண்டறியப்பட்டுள்ளன. இதில் கடைவீதி, ஆர்.எஸ்.புரம் காவல் நிலைய எல்லையில் ஒரு எஸ்.பி.யும் மீதமுள்ள 5 காவல் நிலைய எல்லைகளை மையப்படுத்தி தலா ஒரு எஸ்.பி.யும் என மொத்தம் 6 எஸ்.பி.க்கள் தலைமையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. 28 இடங்களில் தற்காலிக சோதனைசாவடிகள் ஏற்படுத்தப்பட்டு வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையே பிஎஃப்ஐ அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உக்கடத்தில் உள்ள பேக்கரி முன்பு நேற்று காலை பெண்கள் திரண்டு, மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். காவல்துறையினர், அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக சென்று கோட்டைமேட்டில் உள்ள பிஎஃப்ஐ அலுவலகம் முன்பு கோஷங்களை எழுப்பிவிட்டு கலைந்து சென்றனர். அதேபோல, மாவட்டத்தின் பிற பகுதிகளில் காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன் தலைமையில் காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.மதுரையில்: மதுரை நெல்பேட்டை உட்பட சில இடங்களில் ஆர்ப்பாட்டத்துக்கு பிஎஃப் அமைப்பின் நிர்வாகிகள் அழைப்பு விடுத்தனர். அங்கு தெருத் தெருவாக ஒலிபெருக்கி மூலம் போலீஸார் எச்சரிக்கை விடுத்தனர். அதில், 'மத்திய அரசு விதித்துள்ள தடையை மீறி யாரேனும் போராட்டத்துக்கு முயன்றால் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்படுவர்' எனத் தெரிவித்தனர்.

இதனால், போராட்டம் ஏதும் நடக்கவில்லை. நகர், புறநகர் பகுதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.சட்ட போராட்டம் நடத்துவோம்: தடை செய்யப்பட்ட அமைப்பைசேர்ந்த சிலர் கூறுகையில், காவல்துறை அதிகாரிகள் எங்களது தலைவர்களை நேரில் சந்தித்து ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி இல்லை என கூறினர். அதனால், இனி சட்டரீதியாக எதிர்கொள்வோம் என்றனர்.

# ஆர்எஸ்எஸ் பேரணிக்கு அனுமதி மறுப்பு : "சரியான நேரத்தில் மிகச் சரியான முடிவு" சீமான்"



மக்கள் மனதில் மதவெறியைத் தூண்டி, தமிழ்நாட்டை கலவர பூமியாக மாற்ற திட்டமிட்டிருந்த ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் பேரணிக்கு அனுமதி மறுத்துள்ள தமிழக அரசின் முடிவை வரவேற்கின்றேன்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "மக்கள் மனதில் மதவெறியைத் தூண்டி, தமிழ்நாட்டை கலவர பூமியாக மாற்ற திட்டமிட்டிருந்த ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் பேரணிக்கு அனுமதி மறுத்துள்ள தமிழக அரசின் முடிவை வரவேற்கின்றேன். சரியான நேரத்தில் மிகச் சரியாக முடிவெடுத்த தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் வாழ்த்துகளும், நன்றியும்.இதே நிலைப்பாட்டில் உறுதியாக நின்று, ஆர்எஸ்எஸ் பேரணிக்கான தடையை நீதிமன்றத்திலும் உறுதி செய்ய, வலிமையான சட்டப் போராட்டம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, இம்முடிவுக்கு ஆதரவாக தமிழக அரசுக்குத் துணைநிற்போமென உறுதியளிக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.முன்னதாக, 'மத்திய அரசால் பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பு தடை செய்யப்பட்ட நிலையில், அதற்கு எதிராக இஸ்லாமிய அமைப்புகள் கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி வருகின்றன. மாநிலத்தில் மத உணர்வுகளைத் தூண்டும் பல்வேறு நிகழ்வுகள் சமீபத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில் ஆர்எஸ்எஸ் ஊர்வலத்திற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ள அன்று சமய நல்லிணக்க பேரணி என்ற பெயரில் சில அமைப்புகள் ஊர்வலம் மனித சங்கிலி போன்றவற்றை நடத்த அனுமதி கோரியுள்ளது. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை காக்க கண்காணிக்க காவல் துறையினர் முழு வீச்சில் இரவு பகலாக அனைத்து இடங்களிலும் ரோந்து உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழலில் ஆர்எஸ்எஸ் உள்ளிட்ட எந்த அமைப்புகளின் ஊர்வலம் மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி அளிக்க இயலாது' என்று தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

# சென்னை மெரினா, பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரைகளில் இலவச வைஃபை: சேவை வழங்கும் நிறுவனத்துடன் மாநகராட்சி ஆலோசனை



சென்னை மெரினா மற்றும் பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரைகளில் பொதுமக்களுக்கு இலவச வைஃபை வசதி வழங்குவது தொடர்பாக, சேவை வழங்கும் நிறுவனத்துடன் மாநகராட்சி, சுற்றுலாத் துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர். சென்னை மாநகரின் முக்கிய பொழுதுபோக்கு இடங்களாக மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரை ஆகியவை உள்ளன.

இப்பகுதிகளுக்கு தினமும் பல்லாயிரக் கணக்கான உள்ளூர் மக்கள், வெளியூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இவ்விரு கடற்கரைகளையும், மத்திய அரசின் ஸ்வதேஷ் தர்ஷன் திட்ட நிதியில் தமிழக சுற்றுலாத் துறை மூலமாக மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாற்றுத் திறனாளிகள், சக்கர நாற்காலிகள் மூலமாகச் சென்று கடல் அலைகளில் கால்களை நனைத்து ரசிக்கஏதுவாக ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் பிரத்தியேக பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று சுற்றுலாத் துறை மூலமாக இவ்விரு கடற்கரைகளிலும் பொதுமக்களுக்கு இலவச வைஃபை வசதி வழங்க மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.24 மணி நேரமும்.. இந்நிலையில் வைஃபை சேவை வழங்கும் நிறுவன அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

அதில் இந்த சேவை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில், இணையச் சேவையை 24 மணி நேரமும் இலவசமாக வழங்குவதாகவும், இதற்காக மாநகராட்சி நிர்வாகம் எந்த கட்டணமும் செலுத்தத் தேவையில்லை எனவும், ஆனால் மின்சார வசதி, உபகரணங்களை நிறுவுமிடம் மற்றும் பாதுகாப்பு வசதிகளை மாநகராட்சி வழங்க வேண்டும் என்றும் சேவை வழங்கும் நிறுவனம் தெரிவித்துள்ளது.மாநகராட்சி ஆணையர் மற்றும் சுற்றுலாத் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து பதில் அளிப்பதாக மாநகராட்சி அதிகாரிகள், சேவை வழங்கும் நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

கடற்கரைகளில் எத்தனை இடங்களில் அமைப்பது என்பது குறித்து இறுதி செய்யப்பட்டு, மாநகராட்சி மற்றும் சேவை வழங்கும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள இருப்பதாகவும், அதன் பின்னர் இந்த சேவை பயன்பாட்டுக்கு வரும் எனவும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**
**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**
**நடைபெறும் திருமுறை விழா**
**சிறார்களுக்கான போட்டிகள்**



## பேச்சுப் போட்டி

நவம்பர் 12, 2022 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 - 1-10-2016 க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 - 1-10-2013 க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 - 1-10-2010 க்கும் | இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை**
**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..................................................
2. பிரிவு: ..................................................
3. பிறந்த திகதி: ..................................................
4. தொலை பேசி இலக்கம்: ..................................................
5. முகவரி: ..................................................

..................................................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

---

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**
**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**
**நடைபெறும் திருமுறை விழா**
**சிறார்களுக்கான போட்டிகள்**



## திருமுறை மனனப் போட்டி

நவம்பர் 13, 2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

| | | |
|---|---|---|
| பாலர்பிரிவு: | 31-10-2016 ஆம் திகதியும் அதன் பின் | பிறந்தவர்களும் |
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 - 1-10-2016 க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 - 1-10-2013 க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 - 1-10-2010 க்கும் | இடைப்பட்டவர்கள் |

**பயன்தர வல்ல திருமுறைப்பாக்கள் என்ற திருமுறை புத்தகத்தை**
**ஆத்மஜோதி இல்லத்திலும்**
**முருகன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..................................................
2. பிரிவு: ..................................................
3. பிறந்த திகதி: ..................................................
4. தொலை பேசி இலக்கம்: ..................................................
5. முகவரி: ..................................................

..................................................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
திருமுறை விபரமும் கிடைக்கும் இடமும் கையளிக்கும் இடமும்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

# திருக்குறள் கூறும் நன்றியின் மேன்மையும், உதவியின் தன்மையும்



**திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)**
**வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா**
**நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்**

**த**மிழிலே பிறந்து பல மொழிகளிலும் பரந்து அகிலமெங்கும் அறவழி காட்டி நிற்கும் அரியநூல் திருக்குறள். இன, மத பேதம் கடந்து உலகப் பொதுமை நெறியாக இந்நூல் விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினாலும் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ள வியக்கத்தகு நூலிது. தெய்வப்புலவர் முப்பாலிலும் தந்தருளிய 1330 குறள்களும் நமக்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி நிற்கின்றன. அறத்துப்பாலிற் பதினோராவது அதிகமாக அமைந்துள்ள "செய்ந்நன்றியறிதல்" என்ற அதிகாரத்தினை மையமாக வைத்து நன்றியின் மேன்மையையும், உதவியின் தன்மையையும் ஆராய்வதே எனது கட்டுரையின் நோக்கமாகும்.

"நன்றி" என்பது வெறும் வார்த்தையல்ல. உள்ளத்தோடும், உணர்வோடும் ஒன்றிணைந்தது. இது மாபெரும் மரியாதைக்குரிய சொல்லாகும். மிகவும் சக்தி வாய்ந்த சொல் இது. தமிழில் மட்டுமல்ல அனைத்து மொழிகளிலுமே நன்றியெனும் வார்த்தை போற்றுதலுக்குரியதொன்றாகவே இருக்கிறது. தைப்பொங்கல் போன்று பல்லின மக்களும் நன்றிக்கான சிறப்பு நாளைக் கொண்டாடி வருகின்றனர்.

நாம் மிகப்பெரும் சாதனையாளர்களாக இருக்கலாம், ஆனால் ஏதோ ஒரு வகையில் நம்மைப் பெற்றவர்களையும், மற்றவர்களையும் சார்ந்துதான் வாழ்கிறோம். ஆதலால் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சின்னஞ்சிறிய விடயங்களுக்கும் நன்றியுள்ள மனிதர்களாக வாழவேண்டும். எமது ஒவ்வொரு முன்னேற்றங்களின் பின்புலத்திலும் யாரோ ஒருவர் இருக்கின்றார் என்ற புரிதல் நமக்குள்ளே இருந்தால் எமது மனம் தெய்வத்தன்மையடையும்.

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்"**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 104)**

சிறு உதவியாக இருந்தாலும், அவ்வுதவியின் நற்பயனை அறிந்தவர்கள் அந்த உதவியினைப் பனையளவாகக் கொள்வார்கள். பனை என்ற கர்ப்பகதரு முழுமையும் பயன் தரவல்லது. ஒருவர் செய்யும் உதவியினைப் பனை மரத்தோடு திருவள்ளுவர் ஒப்பிட்டு நன்றியின் மகிமையை உணரவைத்துள்ளார். பிறர் நமக்குச் செய்யும் உதவிகளை நாம் மறக்கலாகாது. மறந்து போதல் மனிதப்பண்பு அல்ல. நன்றியுணர்வுடன் வாழ்வதே சிறந்த பண்பாடாகும். ஆனால் நவீன உலகில் மனித மனங்கள் மாறிச் செல்கின்றன. நன்றியெனும் வார்த்தையின் பெறுமதியைப் பலரும் உணர மறுக்கின்றனர். பெற்றெடுத்து இன்னோரன்ன தியாகங்களின் மத்தியில் வளர்த்து, தம் பிள்ளைகளைச் சான்றோராக்கிய பெற்றோர்களை அவர்களது வயதான காலத்திற் சரியான முறையிற் பாதுகாக்காத பிள்ளைகள் நன்றியுணர்வு அற்றவர்கள். மனிதம் மரணித்துப்போவதற்கான அறிகுறிகளிவை.

வாழ்வில் எந்த நன்மைகளையும், அறங்களையும் மறந்தவர்களுக்கும் மீட்சி பெற வழியுண்டென்றும், ஒருவர் செய்த உதவியினை மறந்தவர்களுக்கு வாழ்வில் ஈடேற்றம் இல்லையென்றும் திருவள்ளுவம் இடித்துரைக்கின்றது.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 110)**

**ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்...**
**(புறநானூறு, பாடல் 34)**

ஒருவர் செய்யக்கூடாத பாவச் செயல்களாகக் கருதப்படும் பசுவின் முலையை அறுத்தல், தாலி அணிந்த பெண்ணின் கருவைச் சிதைத்தல், பார்ப்பனரைத் துன்பப்படுத்துதல் போன்றவற்றைச் செய்தவர்களுக்கும் அப் பாவங்களிலிருந்து விடுபடப் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்களுக்கு அப்பாவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேறு வழிகளில்லையென்றெழுதிய ஆலத்தூர் கிழாரின் செய்யுளையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

"இறைவன் வாழும் இடங்களிலொன்று சுவர்க்கம், இன்னொன்று நன்றியுள்ள மனிதனின் இதயம்" என்றார் எழுத்தாளர் ஐசாக் வோல்டன் (Izaak Walton) அவர்கள். உங்கள் வாழ்விலும் இதனை உணர்ந்திருப்பீர்கள். நன்றியுணர்வு என்பது நான், எனது என்ற அகந்தையை அகற்றி மனித மனங்களை ஐக்கியப்படுத்தவல்லது. எதிர்மறையான தருணங்களைக் கூட நேர்மறையாக மாற்றத்தக்க சக்திவாய்ந்த சொல் நன்றியாகும்.

ஒருவர் செய்த உதவியின் தன்மைகளை செய்யாமல் செய்த உதவி, காலத்தினாற் செய்த உதவி, பயன்தூக்கார் செய்த உதவியெனத் திருவள்ளுவர் வகைப்படுத்தியுள்ளார். அளவிற் சிறிதாக இருந்தாலும், உற்ற நேரத்திற் செய்யப்படும் உதவிகள் மாண்பு மிக்கவை. அவை நிலவுலகத்தினும் மிகப்பெரியவை.

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 102)**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**
**(நட்பு அதிகாரம், குறள் 788)**

இக்குறள் என்ன கூறுகிறது.? உடலில் இருந்து உடை நெகிழ்ந்து வீழும்போது உடன்சென்று உதவும் கரங்கள் போல ஒருவரின் துன்பத்தைக் கண்டபோது முன்வந்து உதவுவதே உற்ற நட்பிற்கு அழகாகும். ஆதலால் ஒருவரது இடரான காலத்தில் ஓடிச்சென்று உதவும் மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதனாற்தான் இவ்வுலகு வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டி உறுவார் உறவு.**
**(மூதுரை-17)**

குளம் வற்றிப் போகையில் ஒட்டி உறவாடிய நீர்ப்பறவைகள் நீங்கிவிடும். அதுபோல ஒருவரது துன்பமான காலத்தில் விலகிச் செல்பவர்கள் உண்மை உறவாகவோ, நட்பாகவோ இருக்கமாட்டார்கள். நீரற்றுப் போனாலும் அக்குளத்திலேயே செத்துமடியும் கொட்டி, ஆம்பல், நெய்தல் என்ற மலர்க்கொடிகள் போல ஒட்டி இருப்பவர்கள் மட்டுமே உண்மையானவர்கள். எனவே செழிப்பான காலத்தில் மட்டுமல்ல வறுமையின் போதும் சேர்ந்திருப்பவர்களே மேன்மக்களாவர்.

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 101)**

நாம் உதவி செய்யாதபோதும் ஒருவர் எமது இடர்காலத்தில் மனமுவந்து உதவுகிறாரென்றால் அவருக்கு இந்த மண்ணுலகையும், விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது. கேளாமலே முன்வந்து செய்யும் உதவி உயர்வானது. மண்ணுலகு, விண்ணுலகு என்ற பிரமாண்டங்களைத் திருவள்ளுவர் இக்குறளில் எடுத்தாண்டுள்ளமை செய்ந்நன்றியறிதலின் மேன்மையை மனிதகுலத்திற்கு உணரவைக்கவே.

ஒருவருக்கு நாம் உதவி செய்தால் நமக்குக் கைம்மாறாக ஏதேனும் கிடைக்குமெனப் பயன் கருதிச் செய்யும் உதவிகள் ஒருபோதும் உயர்வானவையல்ல. வாழ்வில் நாம் சந்திக்கும் சில மனிதர்கள் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மிகப்பெரிய நன்மைகளை நமக்குச் செய்துவிட்டுப் போகிறார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்.? அவர்களிடமுள்ள மனிதநேயமே அதற்குக் காரணமாகின்றது. நாம் பயன் கருதாது அறம் செய்ய வேண்டுமென்று திருக்குறள் பின்வருமாறு கூறுகின்றது.

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 103)**

**கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு**
**என் ஆற்றும் கொல்லோ வுலகு.**
**(ஒப்புரவறிதல் அதிகாரம், குறள் 211)**

என்ற குறள் மூலம் உலகு வாழ உதவும் மழைக்கு நாம் என்ன கைம்மாறு செய்கிறோம்.? வான்மழை போன்ற மனிதர்களும் மாற்று உதவிகளை எதிர்பார்ப்பதில்லை. இவர்களை நாம் மறந்துவிடலாகாது. அவர்களுக்குக் காத்திருந்து நாம் நன்றிகூற வேண்டுமெனத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**
**(செய்ந்நன்றியறிதல் அதிகாரம், குறள் 108)**

மற்றவர்கள் செய்யும் உதவியை மறவாதீர்களென்று கூறும் திருவள்ளுவம், பிறர் நமக்குச் செய்யும் குற்றங்களை அன்றே மறந்துவிடுங்களென்கிறது. பழிவாங்கும் தீய செயல்களையும், வன்முறைகளையும் நீக்கி மன்னிக்கும் மனோநிலையை வளர்க்க வேண்டுமென வழிகாட்டி நிற்கின்றது.

இவ்வுலகில் நன்றியெனும் ஒரு வார்த்தை இல்லையென்றால் மனிதம் மரணித்து விடும். நன்றியுணர்வு நம்மிடம் பெருகப் பெருகப் போட்டியும், பொறாமையும், பகையுணர்வும், புறக்கணிப்புகளும் நம்மிடையே அற்றுப்போகும். அன்பு மட்டுமே நம் இதயங்களை அலங்கரிக்கும். நாம் பிறருக்குச் செய்யும் உதவிகளை மறந்தும், பிறர் நமக்குச் செய்யும் உதவிகளை நெஞ்சில் நிறுத்தியும் நன்றியுள்ள மனிதர்களாக வாழ்ந்து வாழ்வை வளப்படுத்துவோம்.

*வாழ்க தமிழ்.!*
*வாழ்க திருவள்ளுவம்.!!*

---

# பாரதி யார்?

------------------------------



*எட்டயபுரம் என்ற எழில்மிகு ஊரில்*
*எளிமைவாழ் சின்னச் சாமிஐயர்*
*லட்சுமி அம்மாவென லட்டான தாய்க்கும்*
*லட்சிய மகனாகப் பிறந்தார்*
*கட்டுக் கோப்புடன் கல்வி கற்றே!*
*கானம் பலவகை ஆக்கினார்*
*எட்டுத் திக்கும் இசைத்த பாடலால்*
*ஏற்றம் பெற்றது பாரதமே!*

*பாரதி என்னும் பெயரைப் பெற்றான்*
*பாரதம் என்ற தேசத்தில்*
*பாரினில் மக்கள் பண்புடன் வாழ்ந்திட*
*பாடல்கள் ஆயிரம் பாடினான்.*
*தேச விடுதலை தோன்ற என்றே*
*தேசிய கீதங்கள் ஆக்கினார்*
*மாசற்ற வீர மறவனின் வாழ்வை*
*மாண்புடன் நாமும் வாழ்த்துவோமே!*

*அச்சமில்லை தொடங்கி அந்திப் பொழுதும்*
*அக்கினிக் குஞ்சையும் ஆக்கினார்*
*துச்சாதனன் சபையில் திரௌபதியைப் பாடலாக்கி*
*துட்ட செயலெனச் சுட்டினார்*
*வண்டிக் காரன்பா விடுதலைக் காதலுடன்*
*விதுரனைத் தூது விட்டாரே!*
*கண்ணன் என்காதலன் கதையைச் சொல்லி*
*கண்ணம்மா என்காதலி என்றாரே!*

*பாப்பாப் பாட்டும் பாஞ்சாலி சபதமும்*
*புதுமைப் பெண்ணையும் காட்டினார்*
*சாப்பாட்டுப் பஞ்சத்தைச் சந்தித்த போதும்*
*சலிக்காமல் கவிதைகள் ஆக்கினார்*
*பாட்டுக் கொருபுலவன் பாரதி என்பார்*
*பாரதி தாசனின் குருவென்பர்*
*பாட்டால் பாரத தேசத்தை எழச்செய்த*
*பாரதியார் புகழைப் பாடுவோமே!*

------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்.**
(416) 84497453

# இலங்கை தமிழரான நடிகர் போண்டா மணிக்கு நடிகர் தனுஷ் செய்த நெகிழ வைக்கும் உதவி

சினிமா



இலங்கை தமிழரான நகைச்சுவை நடிகர் போண்டா மணிக்கு உடனடி உதவியை நடிகர் தனுஷ் வழங்கியுள்ளார்.

தமிழ் சினிமாவில் பிரபல காமெடி நடிகராக இருப்பவர் போண்டாமணி. காதீஸ்வரன் என்ற இயற்பெயரை கொண்ட இவர் ஒரு இலங்கை தமிழராவார். இவருக்கு ஒரு மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் போண்டா மணி, இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் சென்னை ஓமந்தூரர அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பணமில்லாமல் தவிப்பதாக அவர் தெரிவித்த நிலையில் தொடர்ந்து நடிகர்கள் மற்றும் அவரது நண்பர்கள் பலர் அவரை சந்தித்து, உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் தனுஷ் போண்டா மணியின் மருத்துவ சிகிச்சைக்காக 1 லட்சம் கொடுத்து உதவி செய்திருக்கிறார். இதனையடுத்து தாங்கள் அனுப்பிய பணம் மிகவும் உதவியாக இருந்ததாகவும், இந்த உதவிக்கு நன்றி என்றும் கூறி வீடியோ பதிவை வெளியிட்டிருக்கிறார்.

# நடிகை ஜெயலட்சுமி பாடலாசிரியர் சினேகன் மீது வழக்குப் பதிவு:

## அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு



நடிகை ஜெயலட்சுமி அளித்துள்ள புகாரின்படி திரைப்பட பாடலாசிரியர் சினேகன் மீது திருமங்கலம் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து அறிக்கை தாக்கல் செய்ய எழும்பூர் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சினேகம் பவுண்டேஷன் விவகாரம் தொடர்பாக பாஜக நிர்வாகியும், நடிகையுமான ஜெயலட்சுமியும், திரைப்பட பாடலாசிரியர் சினேகனும் பரஸ்பரம் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தனர். இருவரது புகாரின் பேரில் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் போலீஸார் அவர்களை விசாரணைக்கு அழைத்து பின்னர் சமரசம் செய்து அனுப்பி வைத்தனர்.

ஆனால் சினேகம் பவுண்டேஷன் பெயரில் பணமோசடியில் ஈடுபட்டு வருவதாக திரைப்பட பாடலாசிரியர் சினேகன் தனக்கு எதிராக அளித்தது பொய் புகார் என்றும், எனவே சினேகன் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி நடிகை ஜெயலட்சுமி மீண்டும் திருமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் அந்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்குற்றம் சாட்டி இதுதொடர்பாக எழும்பூர் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கை விசாரித்த எழும்பூர் 13-வது பெருநகர குற்றவியல் நடுவர் கே.வி. சக்திவேல், மனுதாரரான ஜெயலட்சுமி அளித்துள்ள புகார்படி கவிஞர் சினேகன் மீது வழக்குப்பதிவு செய்துவிசாரணை நடத்தி, அதுதொடர்பான அறிக்கையை வரும் அக்.19-ம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என திருமங்கலம் போலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக நடிகை ஜெயலட்சுமி செய்தியாளர்களிடம் கூறுகையில், "நான் பாஜகவில் மாநில மகளிரணி துணைத்தலைவராக பதவி வகிக்கிறேன். நடிகையாகவும், வழக்கறிஞராகவும் உள்ளேன். சினேகம் என்ற பெயரில் அறக்கட்டளையை நிர்வகித்து சேவை புரிந்து வருகிறேன். நான் பண மோசடியில் ஈடுபட்டு வருவதாக என் மீது சினேகன் எந்தவொரு ஆதாரமும் இல்லாத, பொய்யான குற்றச்சாட்டை பொதுவெளியில் தெரிவித்து, புகார் அளித்திருந்தார். இதுதொடர்பாக நானும் அவருக்கு எதிராக போலீஸில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனக்கு ஏற்படுத்திய மனஉளைச்சலுக்காக அவர் மீது வழக்குப்பதிவு செய்ய உரிய உத்தரவு பிறப்பிக்க எழும்பூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். அதன்படி நீதிமன்றம் அவர் மீது வழக்குப்பதிவு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது. சினேகனுக்கு எதிரான இந்த உத்தரவு சமூக வலைதளத்திலும், பொதுவெளியிலும் குறிப்பாக அரசியல் மற்றும் திரைப்பட நடிகைகளை தொடர்புபடுத்தி அவதூறாக பேசி வரும் அனைத்து நபர்களுக்கும் பொருந்தும்" என்றார்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இலங்கையின் வட மாகாணத்தில் போதைப் பொருட்கள் பாவனை குறித்து "பெருங்கவலை"

- எமது யாழ் செய்தியாளர்

| YESAR | QUAN | |
|---|---|---|
| | HEROIN | KERALA CANNABIS |
| 2010 | - | - |
| 2011 | 7.24 | 116.85 |
| 2012 | - | 39.68 |
| 2013 | - | 156.60 |
| 2014 | 0.36 | 381.69 |
| 2015 | 0.00 | 594.27 |
| 2016 | 113.33 | 1669.09 |
| 2017 | 29.95 | 1695.43 |
| 2018 | 232.04 | 2113.74 |
| 2019 | 762.25 | 3653.43 |
| 2020 | 821.45 | 4976.40 |
| 2021 | 1268.85 | 7095.05 |
| 2022 | 917.44 | 4865.49 |
| **TOTAL** | **4152.91** | **27357.70** |

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் கடந்த 3 மாதங்களில் யாழில் 10 பேர் உயிரிழந்துள்ள நிலையில் மருத்துவர்கள் கடும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இன விடுதலை வேண்டிப் போராடிய இனம் இன்று போதையில் இருந்து மீளப் போராடும் அவலத்திற்கு இன்று தள்ளப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழப்புகளுக்கு அப்பாற்பட்டு 141 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ள தகவலும் தற்போது வெளிவந்துள்ளது.

இந்தியாவிலிருந்து அதன் தென் பகுதி கடற்பகுதி ஊடாகவே பெரும்பாலும் போதைப் பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்படுகின்றன. அதிலும் குறிப்பாகக் கேரள மாநிலத்திலிருந்தே இவை பெருபாலும் இலங்கைக்குள் நுழைகின்றன.

அவ்வகையில் கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 27 ஆயிரம் கிலோ கஞ்சா இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ள நிலையில் பிடிபடாமல் கொண்டு செல்லப்பட்டது எவ்வளவு என்ற கவலைக்குரிய கேள்வி மக்களால் எழுப்பப்படுகின்றது.

"இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் பின்பு விடுதலை சிந்தனையே ஏற்படக் கூடாது என்பதற்காகவே இந்த போதைப் பொருட்கள் நாட்டிற்குள் உலாவ விடப்பட்டதாகவும் இதற்கு எடுத்துக் காட்டாகப் போர் காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போதைப் பொருள் பாவனை என்ற விடயமே அறியப்படாத ஒன்று" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றஞ்சாட்டுகிறார்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவே கணிசமாக இருக்கும் போது, பிடிபடாமல் இதர வழிகளில் நாட்டிற்குள் பல மடங்கு வந்திருக்கலாம் என்கிற கவலைகளைப் புறந்தள்ள முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறுகிறார்.

ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளில் கேரள கஞ்சா மட்டும் 27,357 கிலோ அரச படைகளிடம் அகப்பட்டுள்ள அதே நேரம் 4,152 கிலோ ஹெராயினும், 1081 கிலோ ஐஸ் போதைப் பொருளும் கடல் வழியாகக் கடத்தி வரப்பட்டு அகப்பட்டுள்ளன என கடற்படையினர் உறுதி செய்கின்றனர்.



ஆனால், கடத்தப்படும் போதைப் பொருட்கள் பிடிபடும் போது, சரியாக எவ்வளவு பிடிபட்டன என்பதற்கு அப்பாற்பட்டு, அதில் ஒரு தொகுதி கணக்கில் காட்டப்படாமல் கள்ளமாக வெளியே எடுத்துச் செல்லப்பட்டு உள்நாட்டு/ வெளிநாட்டுச் சந்தையில் விற்பனைக்குச் சென்றதா என்பது பற்றிய சந்தேகங்கள் இன்றளவும் மக்களால் எழுப்பப்படுகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தற்போது இலங்கையிலும் பயிரிடப்பட்ட 11,026 கிலோ கஞ்சாவும் அகப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறானால் போரின் பின்பு 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 43,616 கிலோ போதைப் பொருள் இலங்கையில் பிடிபட்டுள்ளமை மக்களிடையே அதிலும் குறிப்பாக தமிழர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தளவிற்கு தொடர்ச்சியாக பெருமளவிலான போதைப் பொருட்கள் எப்படி இந்தியக் காவல்துறை, கடலோர பாதுகாப்புப் படையினர், சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரையும் மீறி இலங்கைக்கு கடத்தப்படுகிறது என்பதும், தமது கடற்பிராந்தியத்தை பாதுகாக்க மிகவும் விழிப்பாக இருக்கிறோம் என்று மார்தட்டிக்கொள்ளும் இலங்கைக் கடற்படையினரை ஆகியோரையும் மீறி எப்படி இவை இலங்கைக்குள் நுழைகின்றன என்று கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை. இலங்கை கடற்படையால் கைப்பற்ற அளவைவிட நாட்டிற்குள் கூடுதலாக போதைப் பொருட்கள் ஊடுருவியிருக்கலாம் என்கிற ஊகங்கள் வலுவாக உள்ளன என்பது பொதுவான புரிதலாகவுள்ளது.



கேரளா கஞ்சா தற்போது இந்தியாவில் கிலோ ஒன்று 20 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரை மட்டுமே விலையாகுவதாக தெரிவிக்கப்படுவதனால் இது இலங்கை நாணயத்தில் ஒரு லட்சம் ரூபா முதல் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவினை எட்டுகின்ற போதும் இலங்கையிலே ஒரு கிலோ கஞ்சாவானது தற்போது 3 லட்சம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்ற சூழலில் எஞ்சிய பணம் கடத்தல்காரரின் வருமானம் என்கின்றனர். அதில் மேலிருந்து கீழ் வரை பங்கு செல்கிறது என்பதையும் மறுக்க இயலாது என்று விடயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

இலங்கைக்கு கடத்தப்படும் போதைப் பொருட்கள் முழுமையாக இலங்கையரின் பாவனைக்கு அன்றி அவை ஒன்று சேர்க்கப்பட்டு பல வழிகளில் வேறு நாடுகளிற்கும் கடத்தப்படுவதாக தற்போது கண்டறியப்படுவதனால் இவை சர்வதேச கடத்தல் வலையமைப்பின் ஒரு பகுதியாகவே இருக்கும் என பொலிசார் கருதுகின்றனர்.

இன்று யாழ் குடாநாட்டின் பெரியவர்கள் மட்டுமின்றி இளையோரிடமும் பரந்துபட்டளவில் போதைப் பழக்கம் உள்ளன, அது உடல் மற்றும் மனதை மிகவும் பாதிக்கும் என்று வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அடுத்தகட்டமாகச் சிறார்களும் இந்த மாயவலையில் சிக்கிவிடுவார்களோ என்கிற அச்சம் இப்போது பெற்றோரிடம் ஏற்பட்டுள்ளது என்றும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருட்கள் பாவனையை தடுப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய திணைக்களங்கள் இன்னமும் அசமந்தமாகவே



இருப்பதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தமை சிந்திக்கப்பட வேண்டியதாகவே உள்ளது.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றி 273 கடல் மைல் தூரம் உள்ளது. அதேநேரம் இந்த 273 கடல் மைல் தூரத்தினைப் பாதுகாக்க அல்லது கண்காணிக்க என்னும் பெயரில் 93 முகாம்கள் அல்லது நிலையங்களில் கடற்படையினர் உள்ளனர் அதாவது 3 கடல்மைல் தூரத்திற்கு ஒரு இடம் உள்ளது. அதனையும் தாண்டி எவ்வாறு இந்த போதைப் பொருட்கள் சர்வ சாதாரணமாக எடுத்து வரப்படுகின்றது என்பதற்கும் இன்றுவரை விடைகாண முடியவில்லை.



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்களால் உயிரிழப்புகள் அதிகரிப்பது ஏன்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



“ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 1.5 மில்லியன் மக்கள் சாலை விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். அதேவேளை 20 முதல் 50 மில்லியன் மக்கள் வரை சாலை விபத்துக்களில் உயிரிழக்கவில்லை என்றாலும், அந்த விபத்துக் காரணமாக நிரந்தர அங்கவீரகள் ஆகின்றனர்” உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை.

சாலை விபத்துக்களின் காரணமாக, தனிப்பட்ட நபர்கள் அவர்களின் குடும்பத்தினருக்கு மட்டுமில்லாமல் அது ஒரு தேசத்திற்கே கணிசமான அளவிற்குப் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகிறது. இந்த இழப்புகள் மருத்துவ செலவினங்கள் உயிரிழந்தவர்கள் அல்லது அங்கவீனமாக்கப்பட்டவர்களின் மூலம் கிடைக்கப்பெறும் மனித உழைப்பின் மூலமான உற்பத்தி ஆகியவையும், குடும்ப உறுப்பினர்கள் காயமடைந்தவர்களைப் பராமரிப்பதற்காக பணியிடம் அல்லது பாடசாலை ஆகியவற்றிலிருந்து எடுக்கும் விடுப்பு ஆகியவையும் பாரதூரமான இழப்புகளை ஏற்படுத்துகிறது என்று அந்த நிறுவனத்தின் ஆய்வறிக்கை கூறுகிறது. சாலை விபத்துக்கள் காரணமாக பெரும்பாலான நாடுகளிற்கு தமது தேசிய மொத்த உற்பத்தியில் குறைந்தது 3% அளவிற்கு வீழ்ச்சி ஏற்படுகிறது.

சாலை விபத்துக்களைப் பொருத்தவரை அதில் 90% உயிரிழப்புகள் குறைந்த மற்றும் மத்திய வருவாய் நாடுகளிலிளேயே ஏற்படுகின்றன. அதிலும் குறிப்பாக உயிழப்புகளைப் பொருத்தவரை அதிகபட்சமாக ஆப்ரிக்காவிலும் குறைந்தபட்சம் ஐரோப்பாவிலும் ஏற்படுகின்றன என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

5-29 வயதுடைய சிறார்கள் மற்றும் இளவயதினரிடையே உயிரிழப்புகளுக்கு சாலை விபத்துக்கள் முக்கிய காரணிகளாக உள்ளன. உலகளவில் நடைபெற்ற ஆய்வுகளில் இதற்கு அடிப்படையாக சில காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவது அதை அளிப்பதற்கான நடைமுறைகளிலுள்ள ஓட்டைகள் மற்றும் அதனால் ஏற்படும் ஊழல்கள், குறைந்தபட்ச கல்வித் தகுதியை நிர்ணயிப்பதில் சட்டரீதியாகவுள்ள சிக்கல்கள், பொதுப் போக்குவரத்திலுள்ள பிரச்சனைகள் காரணமாக வளர்முக நாடுகளில் அளவிற்கு அதிகமாக அதிகரித்துள்ள இருசக்கர வாகனங்களின் பயன்பாடு, பொதுமக்கள் நடந்து செல்வதற்கு சாலையின் இருபுறமும் நடைபாதைகள் இல்லாதது, அப்படி இருந்தாலும் அது முறையாகப் பராமரிக்கப்படாமல் இருப்பது என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதில் மிகவும் முக்கியமாக ஆசியாவில் இந்தியா, இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சாரதி அனுமதி பத்திர ஊழல் மிகவும் அதிகமாகவுள்ளது என்பது உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரிகிறது.

உயிரிழப்புகளைப் பொருத்தவரை இளவயதில் பெண்களைவிட ஆண்களே அதிகமாக சாலை விபத்துக்களில் பலியகின்றனர். புள்ள்விவரப்படி பார்த்தால் சாலை விபத்துக்களில் சிக்குபவர்களில் 73% ஆண்கள், இது பெண்களைப் பார்க்க மூன்று மடங்கு அதிகம். இதற்கு உடலியல் ரீதியான காரணங்கள் முக்கியமானவை. இயற்கையான துணிச்சல், அந்த துணிச்சலால் ஏற்படும் சிந்தனையற்ற செயல் ஆகியவையே ஆண்கள் அதிகமாக சாலை விபத்துக்களில் சிக்க வழி செய்கிறது.

வீதி விபத்துக்களின் தரவுகளை காணும் போது ஒப்பீட்டளவில் தெற்காசியாவில்



இலங்கையிலேயே இவை அதிகமாகவுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றிற்கு இலங்கையில் நடைபெறும் 38,000 விபத்துக்களில் 3000 பேர் உயிரிழக்கின்றனர், 8000 பேருக்கு கடுமையான காயங்கள் ஏற்படுகின்றன என்று உலக வங்கி கூறுகிறது. மேலும் கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் வாகன உரிமையாளர்களின் எண்ணிக்கை 70% அதிகளவு உயர்ந்துள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டின் நிலை இவ்வாறு இருக்கும் நிலையில், வடக்கே யாழ்ப்பாணத்தில் நிலைமை என்ன என்கிற கள ஆய்வு மற்றும் தரவுகள் சேகரிப்பில் கனடா உதயன் ஈடுபட்டது.

யாழில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் மாதம் ஒன்றிற்கு 5ற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பதாக வைத்தியசாலை தரவுகள் உறுதிசெய்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 12 ஆண்டுகள் இடம்பெற்ற விபத்துக்களின் காரணமாக 26 ஆயிரத்து 188 பேர் காயமடைந்து 623 பேர் மரணமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வாறு அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து, விதிமுறை மீறிய பயணம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் 2010 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 12 ஆண்டு காலப் பகுதியிலேயே இந்த 28 ஆயிரத்து 188 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களிலேயே 623 பேர் மரணமடைந்தும் உள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் 2010ற்கு முந்திய 9 ஆண்டுகளான 2001 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் 9 ஆயிரத்து 556 பேர் படுகாயமடைய 163 பேர் மட்டுமே மரணமடைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபர தரவுகள் உறுதி செய்கின்றது.



இவற்றின் அடிப்படையில் முதல் 10 ஆண்டுகளினை விடவும் இரண்டாம் 10 ஆண்டில் காயமடைந்தோர் எண்ணிக்கை 250 விகித்த்தினை விட அதிகமாக காணப்படுகின்றது. அத்தோடு மரணம் அடைவோர் தொகை 280 விகிதம் அதிகரித்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் வீதி விபத்து மரணங்களில் இறுதி இரண்டு ஆண்டுகளில் 2020 ஆம் ஆண்டு 257 பேர் காயமடைந்து 46 பேர் மரணமடைந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மிக அதிகரித்து ஆயிரத்து 604 பேர் காயமடைய 80 பேர் உயிரிழந்துள்ளதாக போதனா வைத்தியசாலையின் புள்ளிவிவரம் உறுதி செய்கின்றது.

அவ்வகையில் 2020 ஆம் ஆண்டினை விட 2021 ஆம் ஆண்டு விபத்துகள் அதிகரித்து உயிரிழப்புக்கள் அதிகரித்தமைக்கான காரணம் என்ன என போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளரான மருத்துவர் யமுனானந்தாவைத் தொடர்பு கொண்டு கட்டுரை ஆசிரியர் கேட்டார்.

“வீதி விபத்துக்கள் அதிகரித்த வாகனங்கள் முதல் பல்வேறு காரணங்களால் இடம்பெற்ற போதும் உண்மையில் 2020ஆம் ஆண்டினை விட 2021 ஆம் ஆண்டில் விபத்துக்கள் அதிகரிக்கவில்லை. மாறாக 2020ஆம் ஆண்டு விபத்துகள் குறைவடைந்தன என்பதே உணமையாகும். ஏனெனில் 2020 ஆம் ஆண்டு அதிகரித்த கொரோனா காரணமாக ஊரங்கு சட்டம் மற்றும் நடமாட்ட முடக்கம் நடைமுறையில் இருந்தமையினால் வாகனங்கள் பயணிக்கவில்லை” அதனால் விபத்துக்கள் ஏற்படவில்லை என்றார்.

இவை அனைத்தும் போரின் பின்பு அமைக்கப்பட்ட வேகப் பாதைகள் மற்றும் அதி நவீன ரக வாகனங்களின் அதிகரிப்போடு ஒவ்வொரு வீட்டிலும் இரண்டிற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் பாவனையே முக்கிய காரணமாக இருப்பதோடு இன்று உத்தியோகத்தர்கள் அன்றி சாதரண தினக்கூலி பணியாளர்வரை மோட்டார் சைக்கில் பயணிக்க வேண்டியுள்ளது போன்றவைகளே காரணங்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

10 Milner Business

இதன் அடிப்படையில் ஆண்டுதோறும் வரி செலுத்தும் தரவுகளின் அடிப்படையில் இன்று 7 லட்சம் மக்கள் வாழும் சூழலில் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 327 மோட்டார் சைக்கிள் உள்ளமை உறுதி செய்யப்படுகின்றது. இதேநேரம் முச்சக்கர வண்டிகள் 13 ஆயிரத்து 599 உள்ளதோடு 6 ஆயிரத்து 18 கார் மற்றும் சிறு வான்கள் உள்ளது. இதேபோன்று ஏனைய வாகனங்கள் உட்பட குடாநாட்டில் மட்டும் இன்று பதிவு செய்யப்பட்டவையாக ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 344 வாகனங்கள் உள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.



இதேநேரம் குடாநாட்டு வீதிகளில் பயணிக்கும் அதிக டிப்பர் வண்டிகள், பேருந்துகள் மற்றும் லீசிங்கில் இருக்கும் வாகனங்கள் அனைத்தும் அந்த நிறுவனங்கள் உள்ள தெற்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் இந்த எண்ணிக்கையில் உள் அடங்கவில்லை எனபதோடு குடாநாட்டில் உள்ள பல ஆயிரம் படையினர் மற்றும் பொலிசாரின் பாவனையில் உள்ள வாகனங்களும் வடக்கு மாகாணப் பதிவில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இவ்வாறான வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த என்னதான் தீர்வு என மாவட்டத்தின் மூத்த பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, “25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான வாகனம் நின்ற காலத்தில் அமைத்த வீதிகள் இன்று 2 லட்சத்தையும் தாண்டிய வாகன நெரிசல் மற்றும் கனரக வாகன அதிகரிப்பு பிரதான காரணமாக உள்ளதனால் வீதிகள் அகலப்படுத்தப்பட்டால் மட்டுமே விபத்தினை குறைக்க முடியும் அல்லது ஒரு வழிப் பாதைகள் மூலமோ குறித்த வாகனத் தடை மூலம் மட்டுமே எதிர்காலத்தில் விபத்தினை தடுக்க முடியும்” என்றார்.

இதேநேரம் வீதிகளை அகலப்படுத்துவது என்பதும் தற்போதைக்கு சாத்தியமில்லை. அதாவது ஒரு பரப்பு காணி நகரில் லட்சத்தை தாண்டி கோடியை எட்டிவிட்டது. அதனால் மக்கள் நிலத்தை விட்டுக்கொடுக்கத் தயார் இல்லை. அதே நேரம் உணவுக்கும் மருந்துக்குமே காசு இல்லாத அரசும் நிலத்திற்கு பணம் வழங்க மாட்டாது என்றார்.

அதுமட்டுமின்றி சாலைப் பாதுகாப்பிற்கு பொறுப்பான முகமைகளுக்கு போதியளவிற்கு அதிகாரங்களும் வளங்களும் அளிக்கப்பட வேண்டியது அத்தியாவசியாமனது. அதற்கும் வீதி விபத்துக்களிற்கும் நேரடியான தொடர்புகள் உள்ளன. உரிய அதிகாரங்களும் வளங்களும் இல்லாத நிலையில், வீதி விபத்துக்களை தடுக்க போதிய வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ள இயலாது.



சாலை விபத்துக்கள் மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை 50% அளவிற்கு இலங்கை குறைக்க வேண்டுமாயின் அடுத்த பத்தாண்டுகளுக்கு சுமார் 2 பில்லியன் டொலர்கள் தேவைப்படும்.

ஆனால் நாடு இப்போதிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இந்த 2 பில்லியன்களைப் பெற்றுக்கொள்வது சாத்தியமா என்றும் யாழ் குடாநாட்டில் இளைஞர்களிடையே அதியுயர் இரண்டு சக்கர வாகனங்களுக்கான மோகமும் குறையுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# CANADA தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமான வேட்பாளர் ஸ்ரீனி சுப்பிராவை (‘கலாபம்’ தொலைக் காட்சி – ஸ்ரீனிவாசன்) Markham Regional Councilor – மார்க்கம் பிரதேச உறுப்பினராகத் தேர்ந்தெடுங்கள்








- மார்க்கம் பிரதேசத்தில் எங்கள் எதிர்காலத்தை நாம் இணைந்தே உருவாக்குவோம்!

கனடா நாட்டின் உயர் பெறுமானத்துக்குரிய முன்னரங்க நகரங்களில் மார்க்கம் முதன்மையானது என்றே கூறலாம். மார்க்கம் ஆற்றல் மிக்க பல்வகைப் பண்பாட்டு மரபுகளைக் கொண்ட பல்லின மக்கள் கூடி வாழும் பெருநகரமாகும். இங்கு வாழும் மக்கள் அரசியல் செயற்பாடுகளிலும் பங்குகொள்ள வேண்டும். நாம் அரசுகளுக்கு ஆண்டுதோறும் வரி செலுத்துகின்றோம். அந்த வரிகளைப் பயனுள்ளதாக்க வேண்டுமெனில் அரசியலிலும் ஈடுபாடு கொள்ள வேண்டும். மார்க்கம் பகுதியில் வாழும் பல்வகை இன மக்களையும் ஒன்றிணைத்து வலுவான சமூகத்தளத்தை உருவாக்கும் நோக்கில் நான் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றேன்.

எமது சுற்றாடலை மேம்படுத்துவதற்கும் வணிக வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் மருத்துவமனைகளில் காணப்படும் காத்திருப்புக் காலத்தைக் குறைப்பதற்கும் எமது வரிப்பணத்தை மிகச் சிறப்பாக நிர்வகித்து சுகாதார பாதுகாப்புக் கட்டமைப்பை உறுதி செய்வதற்கும் அனவரும் பொருத்தமான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த பிரதிநிதிகள் தேவை. இவர்கள் மக்களுக்கான நிலையான வலுவான பொருளாதாரதளத்தை உருவாக்க வல்லவர்களாக இருக்க வேண்டும். இத்தகையோரே அரசுகளின் சேவைகளையும் மக்களையும் சிறப்பாக இணைக்க வல்லவர் ஆவர். நான் மக்களுக்கான தொரு தொண்டனாகக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுகளின் சேவைகளுக்கும் மக்களுக்குமிடையே இணைப்புப் பாலமாக இயங்கி வருகின்றேன்.

என்னிடத்தே சமூகப்பணிகள் தொடர்பான நீண்ட வரலாறு உண்டு. கனடாவில் 93ம் ஆண்டிலேயே கலாபம் தொலைக்காட்சி வேவையை நடத்தி தமிழ்மக்களுக்கான ஊடகப் பணியாளனாக என் சேவையைத் தொடங்கிய நான், கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த அரசியலாளர்களைப் பதவிகளில் இருத்துவதற்காகப பாடுபட்டு வருகின்றேன். இதன் விளைவாகவே மாநகரம், மாகாணம், மைய அரசு என்ற நிர்வாக அரச அலகுகளில் சிறந்தவர்கள் மக்களின் பிரதிநிதியாக இயங்கி வருகின்றார்கள். சிறந்த சேவையாளர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் நான் சமூகத்தவரிடையே நிதி திரட்டும் பணிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன், அரச சேவைகள் மக்களைச் சென்றடைவதையும் உறுதி செய்துள்ளேன்.

கனடாவில் தமிழ் மக்களுக்காகத் தோன்றிய முதல் தொலைக்காட்சி ஊடகம் கலாபம். 1993இல் இதை உருவாக்கி நிர்வாகத் தயாரிப்பாளராக வெற்றிகரமாக நடத்தினேன். தமிழர் வணிகம் வளர்வதற்கு இத்தொலைக்காட்சி பேருதவி புரிந்தது. பல்வேறு இனங்களுக்காகத் தொலைக்காட்சி சேவைகளையும் உருவாக்கினேன். பல்வகை இனங்களின் கலை, பண்பாடு என்பவற்றை இந்த பன்முகப் பண்பாட்டுச் சூழலில் மேம்படுத்துவதற்காக நான் என்னுடைய நிபுணத்துவத்தையும் பரந்துபட்ட அனுபவத்தையும் பயன்படுத்தினேன். பன்முகப் பண்பாட்டுத்தளங்களைக் கொண்டிருக்கும் இனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று புரிந்து கொள்வதற்கான பாலமாகவும் இயங்கினேன். இப்போதும் இனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து வலுவான சமூகமான இயங்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். நான் சந்திக்கும் அனைவரினதும் நம்பிக்கைகளையும் உறுதிகளையும் நான் வெகுவாக மதிக்கின்றேன். இக்கருத்துகளை நம்பிக்கையோடு வலியுறுத்தி வருகின்றேன்.

நான் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடனும் இலாப நோக்கற்ற சமூகசேவை அமைப்புகளுடனும் இணைந்து கடும் உழைப்புடனும் சுறுசுறுப்புடனும் பணியாற்றி வருகின்றேன். வெறுமனே பேச்சளவில் இல்லாமல் அவர்களிடையே ‘செயல் வீரன்’ என்ற பெயரைப் பெற்றிருக்கின்றேன். நான் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகக் கடினமாகக் குரல் கொடுத்து வந்திருக்கின்றேன். என் நேரம் உட்பட, என்னால் முடிந்த அனைத்தையும் இப் பணிகளுக்காகச் வழங்கியிருக்கின்றேன்.

நான் இப்போதும் பல தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் இலாபநோக்கற்ற அமைப்புகள் பலவற்றின் உறுப்பினராகவும் இயங்கி வருகின்றேன். பயன்கருதாத இவ்வகைத் தன்னார்வத் தொண்டுப்பணிகளில் ஈடுபடுவதில் நான் உள்ளம் நிறைவடைவதோடு பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

அன்பான உறவுகளே!

நானும் உங்கள் பிரதிநிதியாக மார்க்கம் மாநகரசபையில் இணைந்து செயலாற்ற இதுவே பொருத்தமான தருணம் எனக் கருதுகின்றேன். பொருளாதாரமும் வாழ்வும் பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும் இக்காலத்தில் சமூக மேன்மைக்காகப் போராடவல்ல உங்களுக்கு நெருக்கமான ஒருவரே உங்களுக்கான பிரதிநிதியாக முடியும். மார்க்கத்தில் மக்களோடு நெருங்கி பணியாற்றவல்ல கீழ்நிலை மக்கள் பிரதிநிதி தேவை. மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. இதுவே மாற்றத்திற்கான பொருத்தமான நேரம். என்னை மார்க்கம் பிரதேச சபை உறுப்பினராக தேர்வுசெய்து *(Markham Regional Councilor)* மிகச் சிறந்த சேவையை ஆற்றுவதற்கான ஒரு வாய்ப்பை எனக்கு தாருங்கள்.

தற்போது நான் ஆற்றிவரும் பணிகள் சில:

• தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி **(CEO)**
**Ceylon Broadcasting Inc (TVCEYLON & TV Kallapam) Kallapam TV production Inc. Tamil Cultural Television Network and South Asian Multicultural Association. 2022**

• சபை உறுப்பினர்
**Federal and Provincial Conservative Party Riding association of Markham-Unionville and Markham-Thorn hill. 2022**

• தலைவர் - **Tamil Canadian Conservative Association Canada .2022**

• உப தலைவர் **-”Human Endeavour”• Committed to social and economic change in York Region. 2022.**

• உப தலைவர் - **International Movement for Tamil Culture Canada.**

• இயக்குனர் குழு உறுப்பினர் - **Durham Manor, Ajax & Pickering, new business development.**

• இயக்குனர் - **Foundation & Fundraising Board - Humber River Hospital foundation**

• **board for Sri Lankan communities.**

• முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர் - **Milliken Mills Lions Club - Markham, Ontario.**

• முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர் - **Settlement Assistance & Family Support Service (SAFSS) Scarborough**

• முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர் - **Canadian Tamil Chamber of Commerce.**

ஸ்ரீனியை **(Srini)** தேர்ந்தெடுப்பதன் வாயிலாக மார்க்கத்தில் எங்கள் சிறப்பான எதிகாலத்தை நாமே கட்டமைப்போம்

**- LJI** சத்தியன்

# மறைந்தும் மறையாத பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் ஓராண்டு நிறைவு நினைவாக கனடா ரிஎம்எஸ் தெய்வேந்திரம் நடத்திய “பயணங்கள் முடிவதில்லை“ இசை விழா

மறைந்தும் மறையாத திரைத்துறைப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் இனிய பாடல்களை கேட்டு மகிழ உலகெங்கும் அவரது ரசிகர்கள் என்றும் ஆவலாகவே உள்ளார்கள்.

அந்த வரிசையில் கனடாவில் உள்ள எஸ்.பி.பி ரசிகர்களுக்காக அவரது ஓராண்டு நிறைவு நினைவாக கனடா ரிஎம்எஸ் தெய்வேந்திரம் நடத்திய “பயணங்கள் முடிவதில்லை“ இசை விழா கடந்த 24-09-2022 அன்று சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள உயர் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது

ரிஎம்எஸ். தெய்வேந்திரம் அவர்களின் “இராஜகீதம்“ குழுவின் ஆதரவில் இசைக்குழுவினர் பின்னணி இசை வழங்க கனடா வாழ் பல புகழ்பெற்ற பாடக பாடகிகள் பங்கெடுக்க. அமெரிக்காவிலிருந்து விசேடமாக அழைக்கப்பெற்ற பாடகர் சுரேஸ் அவர்கள் அன்று மேடையில் அமரர் எஸ். பி. பி அவர்களையே மேடையில் கொண்டு வந்து நிறுத்தினார்.

மரர் எஸ்.பி. பி அவர்களையே






அமரர் எஸ்.பி. பி அவர்களே மீண்டும் உயிர் பெற்று வந்து விட்டாரா என்று வியக்கும் அளவிற்கு அன்றைய பாடல்களை இனிதாகவும் ரசிகர்கள் வியக்கும் வண்ணமும் பாடினார் அமெரிக்காவிலிருந்து விசேடமாக அழைக்கப்பெற்ற பாடகர் சுரேஸ் அவர்கள்நீண்ட நாட்களின் பின்னர் நல்லதோர் மெல்லிசை நிகழ்ச்சியை கண்டும் கேட்டும் ரசித்த மகிழ்ச்சியோடு சபையோர் வீடு திரும்பினர்..

பிரபல அறிவிப்பாளர் ரமணன் நிகழ்ச்சிகளை அழகாகத் தொகுத்து வழங்கினார் இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**- LJI** சத்தியன்

# இவ்வார ராசிபலன்

**30-09-2022 வெள்ளி தொடக்கம் 06-10-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணிவான பேச்சு பண வரவு தரும் வாரம். விவேகம் கூடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மதிநுட்பத்தோடு செயல்படுவீர்கள். நட்டமில்லாமல் நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். உளுந்து தானம் செய்வதால் சிறந்த பலனை அடையலாம். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழிலமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும் வகையில் அமையும். ஊக்கம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாளைய கனவு நனவாகும். குதூகலம் அதிகரிக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 4,9,2,7*
*அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X*




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். தனம் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். நன்மைகள் பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் நிறைந்திருக்கும். திருப்தியான காலம். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். உடல் சோர்வு ஏற்பட்டு விலகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2*
*அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Y*




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும் வாரம். முன்னேற்றமான காலமாக அமையும். மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மையுண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். எதிர்ப்புக்கள் விலகும். வசந்தம் தேடி வரும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செய்தி அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலைபளு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றித் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. சிறப்புக்கள் சேரும். வெறுப்புகள் அகலும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சகஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவிகள் கிடைக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B*




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். தொட்டது துலங்கும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் கடுமையாகும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். உறவினர் பகை மாறும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,9,2*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M*




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். விரோதங்கள் விலகும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய் வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். ஆண்களின் அதிகாரம் உயரும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தன லாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். தடைகள் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். குதூகலமான மனநிலை காணப்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K*




**கன்னி:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். விரக்திகள் மறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச்சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கடுமையான காலம். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உள்ளம் மகிழும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான தருணம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். மனக்குழப்பம் தீரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். வேலை பளு குறையும். சந்தோஷம் அலைமோதும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் கச்சேகள் தீரும். மனம் அமைதி தேடி அலைவீர்கள். காதலில் வெற்றிக் காண்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. போட்டி பொறாமைகள் விலகும். திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சீராகும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட செயல் வெற்றிப் பெறும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி ஆதாயம் பெருகும். பணியில் உயர்வு உண்டு. வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். மன அமைதி கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,9,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z*




**துலாம்:** இழந்த செல்வம் திரும்பக் கிடைக்கும் வாரம். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். பணியில் உயர்வு உண்டு. அறிவாற்றல் பளிச்சிடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிடைக்கும். பொறாமைகள் விலகும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். விலை உயர்ந்தப் பொருட்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பொருளாதாரம் உயரும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். புண்ணியம் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். பித்தளை தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் விலகும். திருமணப் பேச்சு வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். நிர்வாகத் திறமை கூடும். எதிர்பார்ப்புகள் கூடும். பொறுப்புக்கள் கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணத்தட்டுப்பாடு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அற்புதமான காலம்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2*
*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L*




**விருச்சிகம்:** பணவரவும், மனநிறைவும் தரும் வாரம். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவீர்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வரம் தரும் காலம். நட்பு வட்டம் விரிவடையும். ஆசைகள் நிறைவேறும். பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். தாய் வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். முன் கோபத்தைக் குறைக்க வேண்டும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 2,8,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q*

**(தொடர்ச்சி 29 பக்கம்)**

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** சிறப்புக்கள் சேரும் வாரம். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிட்டும். பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். ஆனந்தம் பெருகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக்கடன் வசூலாகும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச்செலவு அதிகரிக்கும். காரிய வெற்றி கிட்டும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டாகும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**மகரம்:** சாதனை படைக்கும் வாரம். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். காரியங்கள் கைகூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. லாபம் தரும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்துமாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கி விடும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். திருமண முயற்சி நல்லதாக அமையும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** விரக்திகள் மறையும் வாரம். நீண்ட நாளைய கனவு ஒன்று நனவாகும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். நாவடக்கம் தேவை. விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி பெருகும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றம் ஏற்படும். வம்பு தும்புகள் ஒழியும். ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் நிதானம் தேவை. வியாபாரத்தால் நன்மை உண்டு. மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். எதிர்ப்புகள் தவிடுபொடியாகும். குழப்பங்கள் நீங்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். மனநிம்மதி பெருகும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. இன்னல்கள் அகலும்
வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,T




**மீனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். தொழில் போட்டி மறையும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. தேவைகள் அதிகரிக்கும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவனம் தேவை. போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பானச் செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தா, அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H

காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
LaCapitale · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · BMO Insurance
- digi Media -
Are you getting Million Dollar advice?



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1016



## உடப்பு காளியம்மன் கோவில் புத்தளம்

19ஆம் நூண்டின் மத்தியபகுதியில் ஈழத்தின் பல பிரதேசங்களிலே கொள்ளைநோய் பரவிக் காணப்பட்டது. இந்நோயால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்க நேர்ந்தது. இந்நோயிலிருந்து தப்ப எண்ணிய மக்கள் காடுகளுக்குள் பதுங்கித் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். இவ்வூருக்கு அம்மிபொழிய வயதான பெரியவர் ஒருவர் வருவது வழக்கம். அவர் காளிமீது மாறாத பக்தி கொண்டவர். இவ்வாறு வந்தவேளையில் மக்கள் படும் துன்பமும், அவலங்களும் அவரை வேதனைக்குள்ளாக்கியது. அருகிலிருந்த உடப்பு காளியம்மன்கோவிலுக்குச் சென்று இம்மக்களைக் காப்பாற்றவேண்டும் என மனமுருகி வேண்டிய வேளையில், அன்னை அவரை ஆட்கொண்டபோது காளிகோவிலில் அவர் உரு வந்து தெய்வ வாக்குச் சொல்ல ஆரம்பித்தார்.

இவ்வேளையில் மக்கள் தமது குறைகளைக் கூறி, தம்மை கொள்ளை நோயிலிருந்து காப்பாற்றும்படி வேண்டினர். அப்பொழுது அன்னை வயப்பட்ட கொத்துக்கிழவனார் தமது தெய்வ வாக்கிலே, “என்னை வேப்பிலை கும்பத்திலே வைத்து, கடல்நீரில் விளக்கேற்றி வருடந்தோறும் வழிபட்டு வருவீர்களானால் உங்களை நோய்களிலிருந்து காப்பாற்றுவேன்” என்று திருவாய் மலர்ந்ததாக பல ஐதீகக் கதைகள் காணப்படுகின்றன. இக்குறிப்பினையே செம்பலிங்கஉடையாரும் தமது குறிப்பிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் அவரது குறிப்பின்படி, கி.பி 1878 ஆம் ஆண்டு காளிக்குக் கோவில் கட்டி சிகரம் வைத்தனர் என்றும், 1898 ஆம் ஆண்டு முதன் முதலாக பாலஸ்தாபனம் பண்ணப்பட்டது என்றும் கூறியுள்ளார். இக்கோவிலின் கற்பக்கிரகத்துள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விக்கிரகம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டது.

பொதுவாக காளியின் தோற்றம்பற்றிப் பல கதைகள் கூறப்படுகின்றன. காளியின் உருவச்சிலையிலே சினக்குறிப்புக் காட்டப்பட்டிருக்கும். கடைவாயில் கோரப்பற்கள் காணப்படும். தலை, சுடர்முடிஅமைப்பிலே இருக்கும். திருக்கரங்களிலே ஈட்டி, கத்தி, உடுக்கை, தலை, பாசம், முத்தலை ஈட்டி என்பன காணப்படும். உடப்பு காளிகோவில் கர்ப்பக்கிரகத்துள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வ வடிவம் அற்புதமான தோற்றங்கொண்டது. அது ஆண்பாதி, பெண்பாதியாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆண்பெண் தன்மைக்கேற்றவகையில் ஆடை, அணிகள் அணிவிக்கப்பட்டு வேறுபடுத்தியுள்ள அமைவு, மிகச் சிறப்பான அமைவாகக் காணப்படுகின்றது. வீரபத்திரரும், காளியும் இணைந்த சிலையாக அர்த்தநாரியாக விளங்கும் இவ்வாறான சிலையை வேறெங்கும் காண முடியாது.

பராசக்தியின் அம்சமாகப் போற்றப்படும் காளியும், சிவனின் அம்சமாகப் போற்றப்படும் வீரபத்திரக்கடவுளும் ஒரே அமைவில் அமைந்துள்ள இக்கோவில், மிக விசேடம் பெற்ற கோவிலாகக் கருதப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள தெய்வங்கள் மக்களின் குறைகளை நீக்கப் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர். சிவன் கோவில்கள் வேறாகவும், சக்தியின் கோவில்கள் வேறாகவும் பல கோவில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. ஆனால் சிவசக்தி அம்சமான பத்திரகாளி சமேத வீரபத்திரக்கடவுள் ஒரே அமைப்பில் கொண்ட வணக்கமுறையை, உடப்பு காளிகோவிலில் காணக்கிடைப்பது பெரும்பேறாகும். இவ்வாறாறு காளியும், வீரபத்திரரும் ஒரு அமைப்பைக் கொண்டிருந்தபோதிலும் இக்கோவில் காளிகோவில் என்றே அழைக்கப்படுகின்றது.

உடப்பு காளிகோவிலில் நித்தியபூசைகள் நடைபெறுவதில்லை. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் உச்சிக்காலப்பூசை மாத்திரம் நடைபெறும். ஏனைய நாட்களில் பூசகர் வந்து தீபமேற்றிவிட்டுச் செல்லும் வழமையே காணப்படுகின்றது. இக்கோவில் 1980 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் பண்ணப்பட்டு தரிசன மண்டபம், மணிக்கோபுரம், வைரவர் சந்நிதி என்பன அமைக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டு கும்பாபி'ேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன்பின்னர் இக்கோவிலில் தினமும் மூன்றுகாலப்பூசை, பூசகர் மரபினரால் செய்யப்பட்டு வருகின்றது.

முன்னைய காலத்திலே காளிகோவிலுக்கு அருகில் காமண்டிக்கூத்து எனப்படும் கிராமியக்கலை விமரிசையாக நடைபெற்றுள்ளது. மன்மதனுக்கு காமன் என்றொரு பெயருண்டு. காமனைச் சிவபெருமான் எரித்த கதையைக் கூறுவதாக காமண்டிக்கூத்து காணப்பட்டுள்ளது. இக்கூத்து நடைபெற்ற காணியை, காமண்டிக்காணி என அழைப்பர். இவ்வாறான ஆலயங்கள் பல இந்துசமயத்திலே இடம்பெற்ற கதைகளுக்கு, கிராமியக்கலைமூலம் உயிர்ப்பூட்டி வந்துள்ளமை அக்காலத்தில் நிகழ்ந்துள்ளது. இவ்வாறான மரபுக்கலைகளைப் பேணும் சிறப்பு புத்தளம் மாவட்டத்திலுள்ள பல கோவில்களிலே காணப்பட்டுள்ளது. ஆயினும் தற்காலத்திலே இவ்வாறான கலைகள் கிராமங்களிலோ, அன்றி ஆலயங்களிலோ பின்பற்றும் தன்மை அருகியே காணப்படுகின்றது.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# மரண அறிவித்தல்



பிறப்பு:

09 - 04 - 1932

இறப்பு:

24 - 09 - 2022

# திருமதி. இரத்தினம் இரத்தினம்

**(Kuala Lumpur, Malaysia - Mississauga, Canada - பண்டத்தரிப்பு, Sri Lanka)**

**மலேசியா** Kuala Lumpur **ஐப் பிறப்பிடமாகவும், கனடா** Mississauga, **யாழ். பண்டத்தரிப்பு அம்மன் வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரத்தினம் இரத்தினம் அவர்கள் 24-09-2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.**

அன்னார் தவத்திரு கணபதிப்பிள்ளை கனகசபை (ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர் - மலேசியா), தவத்திருமதி நாகம்மாள் (மலேசியா) தம்பதிகளின் பாசமிகு ஏக புதல்வியும்,

தவத்திரு V. இரத்தினம் (ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்ற அருளானந்தம் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர் இ.போ.சா கோண்டாவில்), மனோகரன் (ஓய்வுபெற்ற கணக்காளர் F.J &G.De Sevam Attorney at Law Colombo), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

தமயந்தி மனோகரன் (ஓய்வுபெற்ற பிரதியதிபர் விபுலாந்த த.ம.வி. கொழும்பு), ஸ்ரீ ஆண்டாள் பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

நிரோஷன் மனோகரன் (Engineer LoLc Technology) சமாலி நிரோஷன், சாயி விவேதிதா, றங்கனி பாஸ்கரன் (கனடா), றங்கராஜன் பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.



***அன்னாரின் இறுதிக்கிரியை 26-09-2022 திங்கட்கிழமை அன்று ந.ப 12:00 மணியளவில் பண்டத்தரிப்பு அம்மன் வீதி எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் விளாவழி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டன.***

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு: மனோகரன் - மகன் (இலங்கை): +94779773632**
**பாஸ்கரன் - மகன் (கனடா): (647) 938-7832**
**(647) 244-3280**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker — Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

EXPRESS AIR TRAVELS AND TOURS
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1382 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 30, 2022

# ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்களின் சஸ்டியப்த பூர்த்தி மங்கள நிகழ்வு





கனடாவில் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்ப் பணியும் சைவப் பணியும் ஆற்றியவண்ணம் எம்மவர் மத்தியில் மொழியையும் சமயத்தையும் ஆன்மீகத்தோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் எம்மவர்களை தூண்டும் ஒரு சக்தியாக விளங்கி வருபவர் ஸ்காபுறோ ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் அவர்கள் அன்னாரது 60வது அகவை பூர்த்தி விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பெற்ற ச'டியப்த பூர்த்தி மங்கள வைபவ நிகழ்வு தொடர்பாக சிவாச்சாரியப் பெருமக்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்பெறும் விசேட நெறிகள் அடங்கிய கிரியைகள் மற்றும் சடங்குகள் அடங்கிய பெருவிழா 27-09-2022 திங்கட்கிழமையன்று காலை 10.00 தொடக்கம் கனடா கந்தசாமி கோவில் கலாச்சார மண்டபத்திலும் ஆலயத்தின் பிரதான வழிபாட்டு தலத்திலும் சிறப்புற நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான சிவாச்சாரியப் பெருமக்கள் அவர்கள் குடும்பத்தினர் மற்றும் குடும்பத்தினர் கலைஞர்கள் உறவினர்கள் ஐந்நூறுக்கும் அதிகமான சபையினர் கலந்து கொண்டனர்.

மொத்தத்தில் ஒரு சமூகத் தொண்டனாகவும் வழிகாட்டியாகவும். மனித நேயம் கொண்டவராகவும் விளங்கும் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் அவர்கள் மற்றும் துணைவியார் ஜெயந்தி அம்மா ஆகியோர் மணக்கோலத்தில் மீண்டும் தோன்றிய காட்சிகள் கண்கொள்ளாத பெருமிதமாகத் தோன்றியது.

(உள்ளே 13ம் பக்கத்தில் விபரமான செய்தி)

# காரைநகர் இந்து பழைய மாணவர் சங்க கனடா கிளையின் 10 ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறுமுகம் நல்லநாதன்

நாளை ஒக்டோபர் 1ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி ஆண்டு விழாவில் லண்டன்- இங்கிலாந்திலிருந்து கலாநிதி ஆறுமுகம் நல்லநாதன் அவர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் மகிமை மிக்க பழைய மாணவனான கலாநிதி ஆறுமுகம் நல்லநாதன் லண்டன் **Queen Mary** பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் தொலைத் தொடர்பாடல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி வருபவர். பேராசிரியர் நல்லநாதன் தனது ஆரம்பக் கல்வியை சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர், பொறியியல் பட்டப்படிப்பினை முடித்த பின்னர் பேராதனை பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தவர்.

2017ஆம் ஆண்டு தொடக்கம் **Queen Mary** பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் தொலைத் தொடர்பாடல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி வரும் நல்லநாதன், தகவல் தொழில்நுட்பத்துறையில் சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வருபவர்.



# மறைந்த பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் ஓராண்டு நிறைவு நினைவாக கனடிய பாடகர் தெய்வேந்திரம் நடத்திய 'பயணங்கள் முடிவதில்லை' இசை விழா




மறைந்தும் மறையாத திரைத்துறைப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் இனிய பாடல்களை கேட்டு மகிழ உலகெங்கும் அவரது ரசிகர்கள் என்றும் ஆவலாகவே உள்ளார்கள்.

அந்த வரிசையில் கனடாவில் உள்ள எஸ். பி.பி ரசிகர்களுக்காக அவரது ஓராண்டு நிறைவு நினைவாக கனடா ரிஎம்எஸ் தெய்வேந்திரம் நடத்திய 'பயணங்கள் முடிவதில்லை' இசை விழா கடந்த 24-09-2022 அன்று சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள உயர் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது

(உள்ளே விபரமான செய்தி 27ம் பக்கத்தில்)

# யோர்க் பிராந்திய கல்விச் சபை அங்கத்தவர் பதவிக்கு வேட்பாளராக நிற்கும் திரு ருக்ஷன் பரா

எதிர்வரும் ஒக்டோபர் 24ம் திகதி நடைபெறவுள்ள யோர்க் பிராந்திய கல்விச் சபை அங்கத்தவர் பதவிக்கு வேட்பாளராக நிற்கும் திரு ருக்ஷன் பரா அவர்கள் கனடா வாழ் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்.




**Rukshan Para is a resident of Cornell, Markham for over 20 years and he continues to call it home with his wife and son. Rukshan is a financial consultant and has successfully led the implementation of multi-million dollar projects for the banking industry.**
**He will bring a strategic leadership approach to operational efficiency, process improvement, and data governance, to enhance the York Region District School Board's vision and to ensure a better education system for our children!**
**Vote Rukshan Para as your next York Region Public School Board Trustee For Wards 5 and 7!**
**For more information on his campaign, visit rukshanpara.com If you hav any questions or would like to bring anything to his attention,** இவரை தொடர்பு கொள்வதற்கு **dpara@rukshanpara.com IG: @rukshanpara**

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136